Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## இன்பத்திரள்.

பூரண நம்பிக்கை பிறவிப் பிணியை வெல்லவும், சரீர நோயைக் கொல்லவும் ஒளடதமாயிருக்கிறது. முன்னது ஈஸ்வரனிடமும், பின்னது வைத்தியரின் வாக்கிலுமுள்ளதெனக் கொள்க.

* *

எஜமானர்களுக்கு விரோதமாய் மனமொழி மெய்களாலும் செய்வது தவறு. ஆனால் எஜமானர்களுக்கு உதவியாக தீய விஷயங்களில் தலையிட்டு காரியங்களை அனுகூலஞ் செய்வதும் நியாய விரோதமான பெருந்தவறு.

* *

நமக்கு முதலில் ஆலகால விஷம் போல் தோன்றும் சில விஷயங்கள இறுதியில் அமிர்தம் போலும் மாறும். இதற்கு நேர்விரோதமாக சில விஷயங்கள் ஆரம்பத்தில் தங்கம்போலிருந்து முடிவில் பங்கமாவதுமுண்டு.

* *

நம் வீட்டிற்குள்ளேயே—நம் நேசிதர்களுக்குள்ளேயே நமது பகைவரான வஞ்சகரும், உயிர் தோழர்களான சமய சஞ்சீவிகளுமிருக்கின்றார்கள்.

* *

நல்லெண்ணமுள்ள இடத்தில் தெய்வீக சக்தி ஜ்வலிக்கிறது. அத்தகைய தெய்வீக சக்தி எமனையும் பணியச் செய்யும்.

* *

தீமை செய்து ஜெயிப்பவனைக் காட்டிலும் நல்வழி சென்று அபஜெயப்படுகிறவனையே உலகமும், உலக பக்ஷகனும் ஏற்றருள் பாலிக்கிறார்கள். ஆனால் தற்போது தீமைக்கு ஜெயம் போல் தோன்றினாலும், தலைமேல் அபஜெயத்தோடு தண்டனையும் நல்வாவு கூறி அவனை அணையத் தயாராயிருக்கிறது. நீதி வழி ஏகினவன் இறுதியில் கடவுளின் தீர்ப்பிலாவது நிச்சயம் ஜெயமடைந்து பரிசும் பெறுகிறானென்பது மிகையாகாது.

* *

தீய விஷயத்தில் உபயோகிக்கும் தந்திரம் விஷத்தில் கலக்கும் பாலாகும். தூய விஷயத்தில் பிரயோகிக்கும் தந்திரம் தேனோடு கலக்கும் பாலுக்கு சமமாகுமெனபது குன்றின் மேலிட்ட தீபம்.

* *

விதை ஊன்றி செடி வளரும்போது அதனோடு களைகளும் முளைக்கின்றன. அதை ஆயுதத்தால களையாவிட்டால் பயிராலாகும் முழுப்பலனும் கிடைப்பதில்லை. பயிர்களுக்கும் பலவித கெடுதிகளும் உண்டு. இதுபோல கல்வி, செல்வம் ஒருவருக்கு வளர்ந்தால் செருக்கு முதலிய களைகளும் முளைக்கும். அதை அறிவென்னும் ஆயுதத்தால் விலக்காவிட்டால் இரண்டுமிருந்தும் இல்லாததைக் காட்டிலும் மதிகத்தீமையே கிட்டும்.

* *

உலகத்தில் ஐந்து வயதுள்ளவனுக்குத் தெரியும் சிலவை ஐம்பது வயதுள்ளவருக்குத் தெரியாமலுமிருக்கலாம். பிரபஞ்சத்தில் அனைத்தையுமறிந்தவருமில்லை; ஒன்றையுமறியாதவருமில்லை.

* *

பூஜை செய்வதினாலாவது, பரமாத்மாவின் திருநாமத்தை உச்சரிப்பதினாலாவது ஒருவன் பக்தனாகிவிடமாட்டான். இவைகளுக்கெல்லாம் ஆணிவேரான அஸ்திவார உள்ளன்பு மலர் புஷ்பிக்காவிடில் ஒரு பயனுமடையான்.

* *

தான் புகழோடு வாழ்தற்கும், தான் குபேர சம்பத்தடைந்து சுகித்தற்கும் ஈஸ்வரனை வேண்டிச் செய்யும் பக்தியுமோர் பக்தியாமா? ஆகா.

* *

நாம் வந்த வேலை திருச்செம்பதமாகிய நித்யானந்த மடைதற்கு; ஆனால் வந்தவிடத்தில்—செல்லும் பாதையில்—ஒதுங்கியிருக்கும இவ்வேளையில், நாம் எங்கிருந்து உதித்தோமோ அங்கு செல்ல மறந்து வயிற்றைத் திருப்தி செய்யவே முனைந்துவிடுகிறோம். நமது வியாபாரமும், உத்யோகமும், உழைப்பும் என் நோக்கொடு நிகழ்கின்றன வெனிலோ அவையனைத்தும் இறுதியில் வயிற்றுக்காக என்பதிலே சங்கடமின்றும். இனி அக்கருத்தின் வழிச்செல்லா தொழிலேவாமாக. வயிற்றுப்பசியோ வெனில் மாறி மாறி உதிக்கும் பசி, அதாவது பசி உண்டாவதும், சாப்பிடுவதும், பின் பசிப்பதுமாகவே இருக்கிறது. ஆகையான் அதற்குமேலான பதவியாகிய என்றும் பசியின்றியிருக்க நித்யானந்த பதமலரைத்தியானிப்பாம்.

அ. கு. அண்ணாமலைநாடார்.

## ஸத்திய தரிசனம்.

## மகாத்மா காந்தியின் ஜீவிய சரித்திரம்.

### 3-ம் பிரிவு-8-வது அத்தியாயம்.

மகாத்மாகாந்தி "நவஜீவன்" பத்திரிகையில் தொடர்ச்சியாக எழுதிவரும் அவருடைய ஜீவியவாழ்க்கை பின்வருமாறு:—

தீர்க்கமாக ஆலோசனை செய்தபிறகு 1909-ம் வருஷத்தில் பிரம்மச்சரிய தர்மத்தை அனுஷ்டிப்பதென்று நான் சங்கல்பம் செய்துகொண்டேன். நான் அதுவரையில் என்னுடைய அபிப்பிராயத்தை என்னுடைய மனைவியிடம் சொல்லவில்லை. பிரதிக்ஞை எடுத்துக்கொள்ளுகையில் தான் இதைப்பற்றி அவளிடம் பிரஸ்தாபித்தேன். அவள் அக்ஷேபிக்கவில்லை. இருந்தாலும் முடிவாக சங்கல்பம் செய்து கொள்ளுகையில் கஷ்டமாகத்தானிருந்தது. அதற்குவேண்டிய மனோசக்தி என்னிடத்தில்லை. என்னுடைய ஆசைகளை எவ்விதம் அடக்கிக்கொள்ளுவது? அந்தக் காலத்தில் ஸ்திரீ புருஷ ஆசையை அடக்கிக்கொள்ளுவதென்பது ஒரு அபூர்வமான விஷயமாக இருந்தது. இருந்தாலும் ஆண்டவன் வழிகாட்டுவானென்ற நம்பிக்கையுடன் நான் பிரதிக்ஞை செய்து கொண்டேன். இந்தப்பிரதிக்ஞை நான் எடுத்துக்கொண்ட பிறகு கடந்திருக்கும் 20 வருஷ காலத்தின் வரலாற்றை ஞாபகப்படுத்திக் கொள்ளுகையில் எனக்கே சந்தோஷமும், ஆச்சரியமுமேற்படுகிறது. 1901-ம் வருஷம் முதலே என் மனதை அடக்கிக்கொண்டுவர நான் ஆரம்பித்துவிட்டேன். ஆனால் இந்தப்பிரதிக்ஞையை நான் செய்துகொண்ட பிறகு எனக்கு ஏற்பட்ட சுதந்திரமும், சந்துஷ்டியும் 1906-ம் வருஷத்திற்கு முன் எனக்கு ஏற்படவில்லை. ஏனெனில் நான் பிரதிக்ஞை செய்துகொள்ளுமுன் எந்த நிமிஷத்திலும் ஆசையால் தூண்டிவிடப்படக்கூடிய நிலைமையில் தானிருந்தேன. அப்பால் நான் செய்துகொண்ட பிரதிக்ஞையானது என்னுடைய ஆசையிலிருந்து என்னைக் காப்பாற்றக்கூடிய பெரிய கேடயமாகிவிட்டது. நாளுக்கு நாள் பிரம்மச்சரியத்தின் மகிமை எனக்குப் புலப்பட்டுவந்தது. நான் போனிக்ஸில் இருக்கையில் இந்தப் பிரதிக்ஞையைச் செய்துகொண்டேன். பிரதம சிகிச்சை வேலையிலிருந்து நான் விடுபட்ட பின் ஜோன்ஸ்பர்க்குக்குச் செல்லும் வழியில் போனிக்ஸுக்குச் சென்றேன். நான் அங்கு போய் ஒருமாதகாலத்திற்குள் பிரமச்சரிய விரதம் என்னைப் பக்குவப் படுத்திக்கொண்டிருந்தது போல் ஸத்தியாக்கிரகத்திற்கு விதை விதைக்கப்பட்டுவிட்டது. முன்னதாக நான் அதைப்பற்றி யோசித்ததேயில்லை. என்னையறியாமலே அந்த எண்ணம் என் மனதில உதித்தது. இருந்தாலும் நான் முன்னதாக அனுஷ்டித்து வந்த முறைகள் அதில் கொண்டுவந்து விட்டனவென்பதை நான் தெரிந்துகொண்டேன். ஜோன்ஸ்பர்க்கில் எனக்கு அபாரமாக ஏற்பட்டுவந்த குடும்பச் செலவை ஒழித்துக்கொண்டு, பிரம்மச்சரிய விரதத்தை எடுத்துக்கொள்ளுவதற்காக நான் போனிக்ஸ் போய்ச் சேர்ந்தேன்.

### பிரம்மச்சரியத்திலுள்ள சிரமம்.

பிரம்மச்சரிய விரதத்தைச் சரியாக அனுஷ்டித்தால்தான் பிர்மத்தின் ஸ்வரூபத்தைக் காணலாமென்று நான் சாஸ்திரங்களில் படித்துத் தெரிந்துகொள்ளவில்லை. அனுபவத்தினால் நாளடைவில் அந்த எண்ணம் என் மனதில் ஏற்பட்டுவந்தது. அது சம்பந்தமான சாஸ்திரப்பிரிவுகளைப் பிற்காலத்தில்தான்நான்படித்தேன். ஒவ்வொரு நாளும் பிர்மச் சரியத்தின் மூலமாகத்தான் சரீரத்தையும் மனதையும் ஆத்மாவையும் கட்டுப்படுத்திக்கொள்ள முடியுமென்ற உணர்ச்சி என் மனதில் வலுத்துவந்தது. அது ஒரு கஷ்டமான பிரதிக்ஞையென்னும் எண்ணம் மறைந்துவிட்டது. அது சந்துஷ்டியும், ஆறுதலும் அடைவதற்கு ஒரு மார்க்கமென்பது தெரிந்துவிட்டது. ஒவ்வொருநாளும் அதன் மகிமை எனக்குப் புலப்பட்டுக்கொண்டுவந்தது.

இது நாளுக்குநாள் எனது சந்துஷ்டியைப் பெருக்கிக்கொண்டு வந்தபோதிலும், இது எனக்கு சுலபசாத்தியமான காரியமாக இருந்ததென்று எவரும் நினைத்துவிடக்கூடாது. இப்பொழுது எனக்கு 56 வயதிற்கதிகமாகியும், அது எவ்வளவு கஷ்டமான விஷயமென்று எனக்குத்தெரிகிறது. ஒவ்வொருநாளும் அது கத்திமுனையின் பேரில் நடப்பதற்கொப்பான விஷயமென்று எனக்குப் புலப்பட்டுவருகிறது. ஒவ்வொரு நிமிஷமும் வெகு ஜாக்கிரதையாக இருக்கவேண்டிய அவசியத்தை நான் உணர்ந்து வருகிறேன்.

### ஆகாரக் கிரமத்தைஒடுக்கிக்கோள்ள வேண்டிய அவசியம்.

இந்த விரதத்தைக் கைக்கொள்ளுவதற்கு முதற்படியாக ஆகாரக் கிரமத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். ஆகாரக்கிரமத்தை வரையறுத்துக்கொண்டால் பிர்மச்சரியத்தை அனுஷ்டிப்பது சுலபமானதென்பதை நான் உணர்ந்தேன். ஆகையால் சாகபக்ஷிணியின் தர்மத்தை அனுசரித்தும், பிர்மச் சரியத்திற்கு ஏற்றவிதமாகவும் எனது ஆகாரக்கிரமத்தை வரையறுத்துக் கொள்ளும் பரீக்ஷையைச் செய்துவர ஆரம்பித்தேன். இந்தப் பரீக்ஷையின் பலனாக பிர்மச்சாரியின் ஆகாரமானது சாமான்யமானதாகவும், ஒரு வரையறைக்குட்பட்டதாகவும், உறைப்பற்றதாகவும், சாத்வீகமானதாகவும் செய்யப்படாததாகவும் இருக்க வேண்டுமென்பதை நான் தெரிந்துகொண்டேன்.

6 வருஷகாலம் நான் பரீக்ஷை செய்து பார்த்ததில் புதிதாகப்பறித்த பழங்களும், கொட்டைகளும் தான் பிர்மச்சாரிகளுக்கு ஏற்ற ஆகாரமென்று எனக்குப் புலப்பட்டது. இந்தஆகாரக்கிரமத்தை நான் அனுஷ்டித்து வந்த காலத்தில் மிருக ஆசையிலிருந்து நான் அடைந்திருந்த விடுதலையானது இந்த ஆகாரக்கிரமத்தைமாற்றிய பிறகு எனக்கு இருந்துவரவில்லை. நான் பழங்களையும், கொட்டைகளையும் புசித்துவந்த காலத்தில் பிர்மச்சரியத்தை அனுஷ்டிப்பது எனக்குச் சிரமமாகவே தோன்றவில்லை. நான் பாலைச் சாப்பிட ஆரம்பித்த பிறகுதான் சிரமம் தெரிந்தது. பழ ஆகாரத்திலிருந்து பால் ஆகாரத்திற்கு நான் திரும்ப நேர்ந்த காரணத்தைச்சரியான சந்தர்ப்பத்தில் சொல்லுகிறேன். பால் ஆகாரமானது பிர்மச்சரியத்தை அனுஷ்டிப்பதைக் கஷ்டமானதாகச் செய்துவிடுகிறதென்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை. இதிலிருந்து எல்லா பிர்மச்சாரிகளும பாலை விட்டுவிட வேண்டுமென்று நான் சொல்லுவதாக நினைத்து விடவேண்டியதில்லை. பலவகைப்பட்ட ஆகாரங்களைப் புசிப்பதால் எத்தகைய நிலைமை பிர்மச்சாரிகளுக்கு ஏற்படுகிறதென்று ஒவ்வொரு ஆகாரத்தையும் பரீக்ஷித்துப் பார்த்துத்தான் சொல்லவேண்டும். பாலைப்போல் தசையைவளர்க்கக்கூடியதாகவும், சுலபமாக ஜீரணமாகக்கூடியதாகவுமுள்ள பழவகை எது வென்பதை இனைமும் நான் கண்டுபிடிக்கவில்லை. டாக்டர்களும், வைத்தியர்களும், ஹகீம்களும் என்னைப்போலவேதான் திண்டாடுகிறார்கள். ஆகவே பாலானது உத்வேகத்தைக் கொடுக்கக்கூடியதென்று நான் கருதியபோதிலும, இப்பொழுது அதை உபயோகிப்பதை விட்டுவிடவேண்டுமென்று நான் ஒருவருக்கும் சொல்லத் தயாராக இல்லை.

### உபவாஸம் வேண்டும்.

பிர்மச்சரியத்திற்கு ஆகாரக்கிரமத்தை வரையறுத்துக் கொள்ளுவது எவ்விதம் அவசியமோ அவ்விதமே உபவாஸமிருப்பதும் அவசியம். நமது உணர்ச்சியை உள்ளும், புறம்பும், பல வழிகளிலும் கட்டுப்படுத்தி வைத்துக் கொண்டிருந்தால் அது ஹதத்துக்குட்பட்டிருக்கும். ஆகாரமில்லாவிடில் உணர்ச்சிக்கு ஆட்டமில்லையென்பது தெரிந்தவிஷயம். ஆகையால் உணர்ச்சியை அடக்கிக்கொள்ள உபவாஸமிருப்பது அனுகூலமாக இருக்கும். சிலருக்கு உபவாஸத்தாலும் பலன் ஏற்படுவதில்லை. கிரியாம்சையில் உபவாஸமிருப்பதால் அவர்கள் தப்புவித்துக்கொண்டு மனது பல வழியிலும் அலைய அவர்கள் இடங்கொடுத்து விடுகிறார்கள். உபவாஸம் முடிந்ததும் என்னென்ன ஆகாரத்தைப் புசிப்பது, என்னென்ன பானத்தை உட்கொள்ளுவதென்று அவர்கள் உபவாஸகாலத்தில் சிந்தனை செய்து கொண்டிருக்கிறார்கள். இதனால் அவர்களுடைய ஆகாரத்தையாவது, ஆசையையாவது அவர்களுடைய உபவாஸமானது கட்டுப்படுத்த முடியாமற் போய்விடுகிறது. உபவாசமிருக்கும் சரீரத்துடன் மனதும் ஒத்துழைத்தால் தான் உபவாஸத்தினால் பலன் கிடைக்கும். அதாவது, சரீரத்திற்கு உதவாத பதார்த்தங்களில் மனதிற்கும் வெறுப்பு இருந்து வரவேண்டும். மனது தான் எல்லா ஆசைகளுக்கும் காரணம். ஆகையால் உபவாஸத்தால் ஒரு எல்லைக்குட்பட்டே பலன் கிடைக்கும். ஏனெனில் உபவாஸமிருக்கும் எவரும் பலவித ஆசைகளால் அலைபட்டுக்கிடக்கலாம். ஆயினும் உபவாசமில்லாவிடில் சரீர ஆசையை அடக்கிக்கொள்ள முடியாதென்றும், ஆகவே பிரம்மச்சரியத்திற்கு உபவாசமிருத்தல் அவசியமென்றும் சொல்லலாம். பிர்மச்சரியத்தை அனுஷ்டிக்க விரும்பும் பலர் வேறுவழிகளில தங்கள் மனதைக் கட்டுப்படுத்தாமற் போய் விடுகிறபடியால் அவர்களுடைய லக்ஷியம் சித்திப்பதில்லை ஆகவே அவர்களுடைய முயற்சியானது பற்றி எரியும் கோடை காலத்தில் மார்கழி மாதத்தியக்குளிரை அனுபவிக்க வேண்டுமென்று விரும்புவதைப் போன்றிருக்கிறது. பிர்மச்சாரியின் வாழ்விற்கும மற்றவர்களுடைய வாழ்விற்கும் ஒரு எல்லையைக் குறிப்பிடவேண்டும். இருவருக்கும் இருக்கும் ஒற்றுமை வெளித்தோற்றம் தான். வித்தியாசம் பட்டப்பகல்போல் தெரியவேண்டும். இருவரும் கண் திருஷ்டியை உபயோகிக்கின்றார்கள். பிர்மச்சாரிகள் ஆண்டவனுடைய பெருமையை நாடி நிற்கையில மற்றவர்கள் தங்களைச் சுற்றியுள்ள தமாஷாக்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இருவரும் தங்களுடைய காதுகளை உபயோகிக்கிறார்கள். பிர்மச்சாரிகள் ஆண்டவனுடைய துதியைத் தவிர வேறொன்றையும் கேட்காமலிருக்கையில், இதரர்கள் இழிவான விஷயங்களைக் கேட்டுக்களிக்கிறார்கள். இருசாராரும் இரவில் வெகுநேரம் விழித்திருக்கிறார்கள். ஒரு சாரார் அந்தக் காலத்தை தெய்வ வழிபாட்டில் செலவழிக்கையில், மற்றொரு சாரார் வீண் ஆடம்பரங்களைக்கண்டு களிக்கிறார்கள். இருவரும் சரீரத்திற்குள்ளிருக்கும் ஆத்மாவிற்கு உணவூட்டுகிறார்கள். ஒரு சாரார் ஆண்டவனுடைய கோயிலை நல்ல ஸ்திதியில் வைத்திருக்க உணவூட்டுகிறார்கள். ஒரு சாரார் அதை நாறும் சாக்கடைக்கொப்பாகச் செய்கிறார்கள். ஆகவே இருவருக்கும் மலைக்கும மடுவிற்குமுள்ள வித்தியாசமிருக்கிறது. நாளுக்கு நாள் வேற்றுமை அதிகரித்து வருமேயன்றி குறையாது.

### பிரம்மச்சரியத்தின் லக்ஷணம்.

பிர்மச்சரியமென்றால் மனோ, வாக்கு, காயங்களை அடக்கிக்கொள்ள வேண்டும். நாளுக்கு நாள் இத்தகைக் கட்டுப்பாடுகளைச் செய்து கொள்ள வேண்டிய அவசியம் எனக்குப் புலப்பட்டு வருகிறது. பிர்மச்சரியத்தின் விசேஷத்திற்கு எவ்விதம் எல்லையில்லையோ அவ்விதமே தியாகத்தின் சக்திக்கும் எல்லையில்லை. அத்தகைய பிர்மச்சரியத்தை அரைகுறையான முயற்சியால் அடைந்துவிட முடியாது. பலருக்கு அது ஒரு லக்ஷியமாகவே இருக்க முடியும். பிர்மச்சரிய ஆசிரமத்தை அடைய விரும்புகிறவர்கள் தங்களிடமுள்ள குறைகளை உணர்ந்து, அவைகளைப் பரிகரித்து முயற்சி கொள்ளச் செய்யவேண்டும். மனதைக் கட்டுப்படுத்திக் கொள்ளாமல் அலையவிட்டிருக்கும் வரையில் பூர்ண பிர்மச்சரியத்தை அனுஷ்டிப்பதாகாது. நம்மை அறியாமலே நமது மனதில் பலவித எண்ணங்கள் உண்டாகக்

(இதன் தொடர்ப்பு 7-ம் பக்கம் பார்க்க.)

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## நாடார்களும், பிராமணரல்லாதார் இயக்கமும்.

( மொழியூர் நக்கீரனார் )

பிராமணர் அல்லாதார் இயக்கத்தைப் பற்றி மித்திரனில் வெளிவந்துள்ள சில வியாசங்கள் பெரும்பாலும் ஒரு தலைச்சார்பாகவே யிருப்பது வருந்தற்பாலது. உதாரணம் ஒன்று கொடுப்போம்.

"தென் ஜில்லாக்களில் ஆலயப்பிரவேசத்திற்கு பிராமணர்களை விட பிராமணரல்லாதாரே தடையாக விருந்து வருகின்றனர். (ஆகையால்) ஒரு சமூகத்தினர், சுவாமியைத் தரிசனம் செய்யும் உரிமையினின்றும் தடுக்கப் பட்டிருப்பாராயின் அந்த உரிமைக்காக அந்தணர்களுடன்போராட வேண்டும்" என அ. ப. ஆதித்தர் சென்ற திங்கட்கிழமை எழுதிய வியாசத்தில் இரண்டு வாக்கியங்கள் இருக்கின்றன.

இது என்ன கொடுமை! பிராமணர் அல்லாதார் தடுத்தால் பிராமணருடன் போராட வேண்டுமாம். சாமமும், பேதமும், தானமும் போதாதா? தண்டத்தையும் கையாளவேண்டுமா? பழி ஓர் இடம்; பாவம் ஓர் இடமா? கழுவுக்கேற்றது கடைக் கோமுட்டி என்ற பழமொழியாக இருக்கிறதே!

இவ்வாறு பிராமணர் மீது தண்டம் என்னும் நான்காம் உபாயம் தொடர்வதற்காக, அவ்வியாசம் எழுதிய நண்பர், அ. ப. ஆதித்தர் பெரியதோர் புது ஜாதியை உண்டுபண்ண முயலுகின்றார். அந்த ஜாதியின் பேர் "பிராமணரல்லாதார்." பிராமணர் மட்டும் நீங்கலாக, நாடார், நாயக்கர், செட்டி, ரெட்டி, பிள்ளை, கள்ளர், குறவர், மறவர், நாயர், தீயர், வலைஞர், புலைஞர், கிறிஸ்தவர், மகமதியர், புத்தர், சமணர், வெள்ளையர், சீனர், நீக்ரோவர், யவனர் (அவ்வாறே பிராமணரல்லாதாரில் பெரியோருக்கு உதாரணமாய் ஏசு, முகமது, புத்தர், சமணர் (?) முதலியோரை நம் பத்திராதிபர் சென்ற வாரத்தில் குறிப்பிட்டிருப்பதும் வியக்கத்தக்கது) வரை ஒன்றுபட்டு, கொள்வினை, கொடுப்பினையால் ஒரே ஜாதியாய்க் கலந்து, பொதுக் கோயில் கட்டி, அதில் சம உரிமை நிறுவி, தம்மிலேயே புரோகிதர் சேர்த்து, நூல்களும் எழுதி, தினையளவும் வேற்றுமையின்றி பார்ப்பனரை போருக்கழைத்து இவ்வியக்கத்தைத் தெரிவிக்க வேண்டுமாம். ஜாதி வேற்றுமையை வேரறுக்க புது ஜாதி படைக்க வந்த இப்புது பிரமா, பிராமணரை மட்டும் வேறு பிரிப்பது ஜாதி வேற்றுமை என்பதை ஆராய்ந்தாரில்லை. பாவம், யார் செய்த வினைப் பயனோ, இத்தனை உயர் நோக்கங்கள் கொண்ட இப்புது ஜாதியில் ஏழைப் பார்ப்பனருக்கு மட்டும் இடம் கொடுக்க அ. ப. ஆதித்தர் அவர்களுக்கு நெஞ்சு உருகவில்லை.

பிராமணர் இல்லாத தமிழர் யாவரும் பண்டை நாளில் ஒரே ஜாதியாரே என்றும், பழந்தமிழ் நாட்டில் ஜாதிப் பிரிவினை கிடையாது என்றும், ஆரியப் பிராமணர் குடியேறி நாற்சாதி வகுத்தனர் என்றும் சிலர் கூறுவதை அறிவோம். ஸ்ரீமான் ஆதித்தரும் அது கொண்டே பிராமணர் அல்லாதார் யாவரும் ஒரே ஜாதி என்றார் போலும். ஆனால் இதுகாறும் இதன் உண்மைச் சரித்திர வாயிலாய் இரண்டில் ஒன்று முடிவு கூறுவதற்கில்லை.

பிராமணர் இல்லாத தமிழர் யாவரும் ஒரே ஜாதியே என்று கொண்ட போதிலும், பிராமணரல்லாத வங்காளியரும் பிராமணரல்லாத பஞ்சாபியரும் அதே சாதியைச் சேர்ந்தவர் என்று கூறவே முடியாது.

நாடார்களுக்கும், மற்ற பிராமணரல்லாத ஜாதியாருக்கும் உள்ள பண்டை நட்பையும், இன்றைய நட்பையும் ஆராய்வோம்.

நாயக்கர் ஆட்சியும், அவர் கோயில் உரிமை தடுத்ததும், ஆறில்லா ஊர்களில் வாழுப்படி விரட்டியதும், சில ஆண்டுகளுக்கு முன் நடந்த சிவகாசிச் சண்டையும், வேறு பல

## இந்திய சட்டசபை.

24-1-27-ல் ராஜப்பிரதிநிதி லார்டு இர்வின் டில்லியில் ஊர்வலம் வந்து புதிய சட்டசபையில் பொன்னாசனத் தமர்ந்து என்ன புகல்வாரோ வென்றெதிர்பார்த்திருந்த எல்லா அங்கத்தினர்கள் முன்னிலையில் வழக்கம்போல் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார். லார்டு ரீடிங்கைப்போல் வக்கீல் வாதம் செய்யாமல் உள்ளதை உள்ளவாறு உரைத்து விட்டார். யோக்கியமாய் நடந்து கொள்ளாத பட்சம் பார்லிமெண்டு யோக்கியதாப் பட்டமளிக்காதென்பதை ஒளிக்காதுரைத்து விட்டார். பயமுறுத்திப் பார்லிமெண்டைப் பணிய வைக்க முடியாதென்பதையும் அவர் சொல்லி விட்டார். மகாத்மா காந்தியும் நம் டெல்லிக்காய் மூட்டைகளுக்கு இதைத்தான் சொல்லி வருகிறார். எல்லாத் துறையிலும் யோக்கியமாயிருங்கள்; ஆங்கிலேயரைப் பயமுறுத்த நம்மிடம் ஆயுதமில்லை; அரசாங்கக் கோழி பொன் முட்டையிடுமென்று அங்கே (சட்டசபை) போகாதீர்கள்; ஏமாந்து போவீர்கள்; ஏமாளிகளாவீர்கள்; நம்முடைய கொல்லையிலிருக்கும் பொன் புதையலை பிரயாசைப்பட்டுத் தேடிப் பாருங்களென்று அவர் கூறுவதை யார் கேட்டார்? இன்னுமிருந்து பார்க்கட்டும்.

நாணயச் செலாவணி மசோதாவை ஜனப்பிரதிநிதிகளால் கண்டித்துப் பேசப்பட்ட தென்றாலும் மசோதா அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

எஃகுத் தொழில் பாதுகாப்பு மசோதா ஏகாதிபத்தியச் சலுகையுடன் தனிக் கமிட்டியின் பரிசீலனைக் கனுப்பப்பட்டிருக்கிறது.

---

ஊர்க் கொள்ளைகளும் இதுவரை பிராமணரல்லாத சாதியார் நம் மிடம் காட்டி வந்த அன்பின் மிகுதிக்கு போதிய சான்றாகும்.

இன்றோ என்றால் நமக்கு நம் உரிமை தருவதாய் அவர்கள் அழகாய் வாய்ப் பந்தல் இடுகிறார்கள். பயன் என்ன? பிராமணருக்கான் வாய்ப்பந்தலில் என்ன குறைவா?

செய்கையிலோ முழுச் சூனியம். பிராமணன் வேளாளனை நடத்தி வருவதைவிட, வேளாளன் நாடானை இழிவாக நடத்த முயன்று வருகிறான்.

ஆகவே, நாடான் ஒருவனை "பிராமணன் சோற்றுக் கடைக்குப் போகாதே; பிராமணனல்லாத வேளாளன் கடைக்குப் போ" என்று தூண்டுவதன் முன் வேளாளரை "நீங்கள் நாடார்கள் கடையில் வந்து சாப்பிடுங்கள்; வேற்றுமை வேண்டாம்" என்று தூண்ட வேண்டியது அ. ப. ஆதித்தரின் முதற் கடமையாகும்.

ஆகவே, வேளாளர், நாயக்கர், செட்டிகள் முதலியோர் நம் வழி வரும் வரை அவர்களுடன் நாம் ஒத்துழைக்கவே கூடாது. பிராமணர் வழிக்கு வருமட்டும் அவர்களுடன் பிராமணரல்லாதார் ஒத்துழைக்கக் கூடாது என்கிறார் அ. ப. ஆதித்தர். ஆயின், அதே நியாயப்படி, வேளாளர் வழிக்கு வருமட்டும் வேளாளருடன் நாம் ஒத்துழைக்கலாமா? ஒத்துழைக்கும்படி ஸ்ரீமான் ஆதித்தர் அழைப்பது தகுமா? எப்படி அழைப்பது? முன்பின் முரண் அல்லவா?

ஆதலால், மொத்தத்தில் பிராமணர் அல்லாதாருடன் சேர்ந்து ஸ்ரீமான் ஆதித்தர் பிரரேபிக்கிறபடி பிராமணரை வெறுத்துத் தொலைப்பது சரியல்ல. அன்றி பிராமணரோடு சேர்வதும் இப்போதைய நிலைமையில் சரியல்ல.

இத்தனை நாள் நடுவு நிலைமை காத்து வந்தோம். இன்னும் சிறிது நாள் அவ்விதமே இருப்போம். இருந்து முன்னேற முயலுவோம். முயன்று உயர்வடைவோம். உயர் வடைந்தால் நம்மைத் தேடி வரும் சம உரிமை.

மதியாதார் தலைவாயில் மிதியோம்.

## உயர்தரப் பள்ளிக்கூடங்களின் நோக்கமு மாக்கமும்.

### பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்காய் முடிந்தது.

ஆசானும் பிள்ளைகளும் தரையில் உட்கார்ந்திருக்க, முன்னவர் கல்வி கற்பிக்க பின்னவன் பெற்றுக்கொள்ளும் முறைமை பண்டு தொட்டு நம் செந்தமிழ்நாட்டில் நடந்துவருகின்றது. இம்முறைமைக்கேற்ப மூன்றாம் அல்லது நான்காம் வகுப்புவரைக்கே கல்வி கற்றுக்கொள்ள பிள்ளைகள் இடம் பெறுவர். ஆசானும் இவ்வகுப்புக்களுக்குயர்ந்த வகுப்புக்கள் வைத்து நடத்தத் தகுதியிலனுவன்; கல்வி இலாகாச் சட்டங்களும் இடந்தரா. ஆகலின், இவ்வகுப்புகட்குமேல் உயர்ந்த கல்வி கற்க விரும்புஞ் சிறுவர் தாம் முன் கற்றுவந்த திண்ணைப்பள்ளிக்கூடங்களை ஒழித்து அவற்றுக்கு மேலதாகிய மத்திபப் பள்ளிக்கூடங்களையண்மிச் சேர்ந்துகொள்வர். அங்கு தாய் மொழியிற் கற்பிக்கப்படுகின்ற பூமி சாஸ்திரம், இயற்கை சாஸ்திரம், கணிதம், சரித்திரம் முதலிய பாடப் பகுதிகளோடு ஆங்கிலத்தையே முதன்மையாய்க் கருதிக் கற்றுக்கொள்வர். அங்கு தம்முன்னன் திண்ணைப்பள்ளிக்கூடங்களின் ஒழுக்கம், கட்டளை, புத்தகம், கற்கும் வேளை, ஆசான்வழிபாடு முதலியன பெரிதும் வேறுபட்டிருக்கக் காண்பர். காலைமுதல் மாலையீறாக கல்வி கற்பித்தவன் ஒரு ஆசானேயாவன். இப்பொழுது ஆறு அல்லது ஏழு ஆசிரியர் ஒரு நாளிற்றானே கல்வி கற்பிக்கின்றனர். தலைமை ஆசிரியர் வேறு. ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர் வேறு. தமிழ் கற்பிக்கும் ஆசிரியர் வேறு. ஆக இப்படி பற்பல ஆசிரியர்களும் பற்பல பாடங்களைக் கற்பிப்பர். முன் ஆசானைக்கண்டக்கால் "ஐயா தோத்திரம்" என்று வாய்விட்டுக் கைகூப்பி நின்று வழிபாடு செய்த பிள்ளை, இப்பொழுது தன் வலக்கையைத் தன் நெற்றியின் வலப்புறத்தே ஒன்றும்படி உயர்த்திக்கொண்டு ஆங்கில தோரணையில் வழிபடுகின்றான். கல்வி கற்பிக்கும் ஆசிரியர் வேறு வேறாவது போல அவர் கற்பிக்கும் முறைகளும் பல்திறப்படும். முன்னர், திங்கள் ஒன்றுக்குப் பன்னிரண்டு துட்டும் இடையிடையே புதிய தானியக் காணிக்கையும் ஆசானுக்குக் கொடுத்து வந்த பிள்ளை இப்பொழுது நாலுமுதல் ஒன்பது ரூபாய்வரை கொடுக்கின்றான். முன்னைய உடை நடை பேச்சினும் இப்பொழுதைய உடை நடை பேச்சு வேறு. திண்ணைப்பள்ளிக்கூடத்தினின்றும் வெளியேறிய பொழுது பெற்றிருந்த அறிவினும், இம்மத்திபப் பள்ளிக்கூடத்தை விட்டு வெளியேறி உயர்தரக்கலாசாலைக்குப் போகுங்கால் மாணவன் அறிவில் முதிர்ந்தவனும், தேர்ந்த சாஸ்திர ஆராய்ச்சிக் குகந்த அஸ்திபாரத்தை யுடையவனுமிருக்கின்றான். திண்ணைப்பள்ளிக்கூடத்தினும் மத்திபப் பள்ளிக்கூடம் இவைபோல் வன பல முன்னேற்றங்களாற் சிறந்திலங்குகின்றது.

சிறு திண்ணைப்பள்ளிக்கூடங்களின் அநுபவங்களிலும் மத்திபப் பள்ளிக்கூடங்களின் அநுபவங்கள் திடீரென மிகவும் உயர்ந்து மாணவர்க்கும், ஆசிரியர்க்கும் மற்றோர்க்கும் கலிவையுண்டு பண்ணுவதைக்கண்ட அரசாங்கத்தார் இவ்விரு பள்ளிக்கூடங்களின் இடையிலே, பெரும்பாலும் மத்திபப் பள்ளிக்கூடச் சட்டதிட்ட வாசாரங்களைத் தழுவியும் சிறுபான்மை சிறு திண்ணைப் பள்ளிக்கூட ஆசாரங்களைத் தழுவியும் பெருந் திண்ணைப்பள்ளிக்கூடம் என்று ஒன்றை ஏற்படுத்தினர். இதுதான் நமது வியாசநாயக உயர்தரப் பள்ளிக்கூடம் " மத்திபப்பள்ளிக்கூடத்திற்குக் குறைந்தது யப். ஏ. வாசித்து போதனா முறை கற்றுத் தெரியவரே தலைமையாசிரியராகவும், போதனா முறை பயின்ற மெட்ரிக்கியுலேஷன் கல்வியாளரே ஆசிரியர்களாகவும் இருக்க, மாணவரின் தினசரி ஆஜர்ப்பதிவு மிகுதியாகவும், ஒழுங்காகவும் இருக்கவேண்டும்" என்ற நியதிகள் இருப்ப, பெருந்திண்ணைப்பள்ளிக்கூடங்களுக்கு அப்படிப்பட்ட நியதிகள் இல்லை. மத்திபப் பள்ளிக்கூடத்தைவிட பெருந் திண்ணைப் பள்ளிக்கூடத்துக்கே அரசாங்கத்தார் மிகுந்த பணவுதவி செய்கின்றார்கள். எளிய முறையிலும் செலவிலும் இனிய கல்வி பயிற்றுவிக்கப்பட வேண்டுமென்ற நன்னோக்கங்கொண்டே இந்தப்பள்ளிக்கூடம் ஏற்படுத்தப்பட்டது. இங்கு மூன்றாம்பாரம் கற்றுத் தேரிப் போதனா முறைப் பயிற்சி பெற்றவர்களும் ஆசிரியராகக் கொள்ளப்படுவர். பெண்டிரும் ஆசிரியம் நடாத்தலாம். தலைமை ஆசிரியரைப்பற்றிக் கல்வி சம்பந்தமான கட்டுப்பாடுகளில்லை போலும். யப். ஏ. கற்றவர்களே யன்றி மெட்ரிக்கியுலேஷன் கற்றவர்களும், மூன்றாம்பாரம் தேரியவர்களும் தலைமையாசிரியர்களாக விருந்துகொள்ளலாம். மாணவரின் தினசரி ஆஜர்ப்பதிவு மிக ஊன்றிக் கவனிக்கப்படமாட்டாது. இன்னும் இவ்வாறே பல நலங்களுள.

ஆகையால் பெரியார் பலர் பற்பலவிடங்களினும் இத்தகைய பெருந்திண்ணைப்பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தியுள்ளார். எளிய விலையில் இனிய கல்வியைப் பெற மாணவரும் பெற்றோரும் காமுற்றனர். தூத்துக்குடிச் சந்தையில் துட்டுக்கு எட்டு என்றால் நாடாதார் யாரோ! மத்திபப் பள்ளிக்கூடங்கள் யாவும் கைவிடப்பட்டன. ஆகலின் காலத்துக்குத்தக்க கோலம் என்றபடி அவைதாமும் பெருந்திண்ணைப்பள்ளிக்கூடங்களாகிக்கொண்டன. மத்திபப் பள்ளிக்கூட ஆசிரியர் தம்மை பெருந்திண்ணைப் பள்ளிக்கூட ஆசிரியராகவும், டை முன் பள்ளிக்கூடப்பிள்ளைகள் தம்மை டை கீழ்ப் பள்ளிக்கூடப் பிள்ளைகளுமாக்கிக்கொண்டனர். எனின், எங்கும் மத்திபப் பள்ளிக்கூடங்கள் தளர்ந்து சிறுகவும், பெருந திண்ணைப் பள்ளிக்கூடங்கள் வளர்ந்து பெருகவும் காலமாயிற்று. உலகம் உவப்பக்கலை பயிற்றுவிக்கும் இவை வாழிய! நீடுக!

[தொடரும்]

## அருப்புக்கோட்டையில் வரவேற்பு.

நாளது அக்ஷய ஞு தை மீ 22 வ இவ்வூருக்குக் கிழக்கே எட்டு மைல் தூரத்திலுள்ள திருச்சுழிகை நாடார்களின் வித்தியாசாலையின் புதுக்கட்டடத்திறப்புவிழாவிற்கு ஸ்ரீமான் சௌந்தரபாண்டிய நாடாரவர்கள் இவ்வூர் மார்க்கமாக வருவதாக அறிந்து ஸ்ரீமான் முதலாளி மு. மு. மு. ஞானகச் சின்ன வாசகசாலையின் சார்பாக அன்னவரை வரவேற்க பிரபல ஏற்பாடுகள் செய்திருந்ததற் கிணங்க அன்றுகாலை 10 மணி சுமாருக்கு ஸ்ரீமான் சௌந்தரபாண்டியநாடாரவர்கள் மதுரைநாடார் மகாஜன சங்கம் காரியதரிசி ஸ்ரீமான் ஆறுமுக நாடார் அவர்களுடன் வந்து சேர்ந்தார்கள்.

ஸ்ரீ சங்கரலிங்கவிலாஸ் பஜனாலய மாணவர்களின் இன்னிசை யொடு சுதி லயந்தவறா சங்கீத வரவேற்பு முழக்கத்தினிடையே அவர்களுக்கு குதூகலத்துடன் வரவேற்பு நடந்தது.

ஸ்ரீமான் சொ. ஆ. சொக்கலிங்க பாண்டியர் அவர்கள் வரவேற்பு கூறியதும் நண்பர் ச. சு. சர்க்கரைப்பாண்டியர் ஸ்ரீமான் சௌந்தரபாண்டிய நாடார் அவர்களுக்கு உபசாரப்பத்திரம் படித்துக் கொடுத்தார். பின் ஸ்ரீமான் சொ. ஆ. சொக்கலிங்கபாண்டியரவர்கள் சங்கம் காரியதரிசியவர்களுக்குஉபசாரம்சொல்லினர். தலைவர்கள் பதில் உரைத்த பின்னர் புஷ்ப ஹாரஞ் சூட்டி சிற்றுண்டி கொடுத்து தாம்பூலம் வழங்கியதும், வாசகசாலையின் காரியதரிசிகளிலொருவரான நண்பர் பெ. வனுதிநாதர் அவர்கள் வந்தனோபசாரம் சொல்லினர். பின் திருச்சுழிகைக்குப் புறப்பட்டார்கள்.

சி. வ. கு. சுப்பிரமணியன்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



நாடார் குலமித்திரன்

அக்ஷய ஹூ மாசி மீ ௩ உ

# எங்கும் கண்டனம்.

சீன தேசத்திற்கு இந்தியக் கவர்ன்மெண்டார் இந்தியப் படைகளை அனுப்பக்கூடாதென்று இந்தியாவில்ச் சிரத்தையுள்ள எல்லோரும் ஏகோபித்துக் கண்டனம்செய்துவருகிறார்கள். மகாத்மா காந்தி தென்னாப்பிரிக்காயுத்தத்தில் பிரிட்டிஷாருக்கு சமயோசிதமான தக்க உதவி செய்தாரே. ஐரோப்பா யுத்தசமயத்திலும் இந்தியாவில் யுத்தத்திற்கு ஆட்களைச் சேர்த்தனுப்ப உதவி செய்தாரே. எற்றசமயத்தில் எல்லோருக்கும் உதவிசெய்ய வேண்டுமென்று கருணை பாலிப்பவரே இதைப் பற்றி என்ன சொல்வாரோவென்று எதிர்பார்த்திருந்தோம். அவர் சீனாவிலுள்ள அன்னியநாட்டினரை பாதுகாப்பதாக மாறுவேடம் பூண்டு உண்மையில் சீனாவின் சுதந்திரத்தை அடக்கிவிடுவதற்காகவே நமது துருப்புகளை வெட்கமில்லாமல் உபயோகப்படுத்துகிறார்களென்றுகூறி ஐரோப்பியர்களல்லாதவர்களை கசக்கிப்பிழிந்து கொள்ளுவதற்கு இந்தியாவை கருவியாக உபயோகப்படுத்துவதைக் கண்டித்துவிட்டு அல்லாம் காங்கிரஸில் பரிபூரண சுதந்தரத் தீர்மானம் வந்த தன்மையையும், "இனித்திய தம்பிமாரே இன்னமும் பொறுக்களப்பா" என்று தருமர் தம்பிமார்களைப் பொறுத்திருக்கும்படி போதித்ததுபோல் தம்போன்றவர்களாகிய அலீசகோதரர், சாம்மூர்த்தி முதலியவர்கள் வேகத்தைத் தணித்து வைத்த விபரங்களையும் விளக்கிய விடத்தில் சீர்திருத்த சட்டத்தை இப்பொழுது அமுல் நடத்திவைப்பதால் இந்த ஜீவாதாரமான அதிகாரம் கிடைத்துவிடாது; இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கைராட்டினத்தைப் பற்றிக் குறிப்பிடுவதைக் கண்டு பொறுமையற்ற வாசகர்கள் சிரிக்க வேண்டியதில்லை; நாம் சாமான்ய சனங்களுக்காக வேலை செய்யும் வரையில் அவர்களுடன் நாம் நெருங்கிய சம்பந்தத்தை ஏற்படுத்திக்கொள்ள முடியாது; அவர்களுடைய ஊழியர்களாக அவர்களிடையே நாம் வேலைசெய்தால் தான் அது சாத்தியப்படும் என்று அதிகாரப் பிரமுகர்யுள்ளவர்களுக்கு அடிகள் பன்முறை இம்முறை கூறியதுபோல் கூறியிருக்கிறார்கள். யாரும் இல்லாத கானக (நம்முடைய சொல்லை ஏற்காதசபைகள்)த்தில் போய் நின்றுகொண்டு தொண்டைவலிக்கக் கத்தாதீர்கள்; அவ்வொலிவிரிந்த ஆகாயத்தில் பிரயோசனமில்லாமல் மறைந்து போகக்கூடும்; நம்முடைய ஏழைச் சகோதரர்கள் நடுவில் மெல்லிய குரலில் இன்புறும் சொற்கள் சிறிதிலசத்திடினும் அவர்களுணர் வில்த் தாக்கிப் பெரிய பிரயோசனத்தைத்தரும் என்று எத்தனையோ தடவை சாற்றியிருக்கிறார். லார்டு ஒளாட்சனும் சாமான்ய ஜனங்களிடமிருந்து பெறும் சக்தியே பலமுள்ள சக்தியென்று கூறியுள்ளார். இவைகளெல்லாம் சுயராஜ்யக்கட்சியார் மூளையில் இனியாவது பதியுமா? இந்தியச் சட்டசபை முற்றும் ஐயர், ஐயங்கார், நேரு கூட்டங்களாகவே நிறைந்திருந்தாலும், பிடிவாதமுள்ள அதிகாரவர்க்கத்தை ஒருபடியாவது இறக்கிவிடமுடியுமா? இறக்கிவிடவும் ஏற்றிவைக்கவும் காந்தியடிகளாலல்லவோ முடியும்? ஸ்ரீமான் ஸ்ரீநிவாசய்யங்கார் பேச்சு எடுபடவில்லையென்றவுடனேயும் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி சாயம் பிடிக்கவில்லையென்றவுடனேயும் இனி தேசபக்தர்களுக்கு சட்டசபையில் என்ன வேலை என்று "நவசக்தி" கூறியிருக்கும் நியாயங்களை மறுக்க யாரால் முடியும்? ஸ்ரீமான் படேலும், ஸ்ரீமான் நரசிம்மராஜவும் சட்டசபைத் தலைவர்களா? சமாச்சாரம் அறிவிக்கும் ஆபீஸ்களா? வீரம்மிகுந்த தால் வழிவந்தவர்களானால் ஏன் சட்டசபையைவிட்டு வெளியேறியிருக்கக்கூடாது? இதுவோ முட்டுக்கட்டை? ஒட்டுப்புல்லன்றோ? ஸ்ரீமான்கள் ஐயங்கார், படேல் நேரு, தாஸ். முதலியவர்கள் "நவசக்தி" வினாவுக்கு விடையளிக்கட்டும் அதுகூறும் நன்மதிகளை நன்கு கவனிக்கட்டும்.

கடற்கரைக் கண்டனம் இடர்ப்படும் சனங்களுக்கென்ன பிரயோசனத்தைக் கொடுக்கும்? காந்தியடிகள் இசைத்தவழி நின்றாலன்றோ எல்லாம் கொடுக்கும்? அடிகள் காட்டிய நல்வழியன்றி வேறு நற்புதுவழி கோல்வாருண்டா? கதரையும் தீண்டாமையும் காங்கிரஸிருந்து விலக்கிவிடுவது ஒரு புதுவழி யாகுமா? உடலிலிருக்கும் உயிரையும் அழகையும் பிரித்து விடுவது போலாகுமன்றோ?

இந்தியப்படை சைனாவின் பிரதான நகரங்களில் மேளதாளத்துடன் ஊர்வலம் போய்க்கொண்டிருக்கிறது. இங்கே ஐயரும், ஐயங்காரும் எங்களைக்கேட்காமல் படைகளை அனுப்பக்கூடாதென்று தீர்மானங்கொண்டு வருவதற்கு அனுமதி வேண்டுமென்று தலைவர்களிடத்தில் சலாம்போட்டுக் கொண்டிருப்பது சரியா? ஆகவே இப்போது சட்டசபையில் வீரர்கள் இல்லை என்று "நவசக்தி" கூறுவதும் நியாயமே.

## நாடார்மஹாஜன சங்கம் ஜெனரல் மீட்டிங்.

நமது நாடார்மஹாஜன சங்கம் ஏழை மாணவர் ஸ்காலர்ஷிப் லாட்டரி மூலம் கிடைத்தபணத்துக்கு மதுரையிலேயே கட்டடங்கள் வாங்குதாக 12—2—27-ல் மதுரையில் விக்டோரியா எட்வர்ட் ஹாலில் கூடிய ஜெனரல் மீட்டிங்கில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. விபரம் அடுத்த வாரம் விரிவாக வெளிவரும்.

(ப-ர்.)

"நாடார் குல மித்திரன்" க்ஷேம நிதி லாட்டரிக்கு நாடார் குலாபிமானிகளனைவரும் ஒத்தாசை செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

## உயிர்ப்பலியை நிறுத்துங்கள்.

அன்பர்களே!

உயிர்ப்பலியைநிறுத்துங்கள். ஏழைப் பிராணிகளாகிய ஆடு கோழிகளிடத்து இரக்கங்காட்டுங்கள். சிறு தெய்வங்கள், இறந்தவர்கள் ஆகியவர்களின் பொருட்டாவது, வேறு எக்காரணத்தை முன்னிட்டாவது உயிர்ப் பிராணிகளைக் கொல்லாதீர்கள். உலகிலுள்ள எல்லாவுயிர்களையும் படைத்துப் பரிபாலிப்பவர் கடவுளேயாவர். ஆதலால் அவர் பெயரால் சமயச் சார்பில் உயிர்க்கொலை புரிவது பெரும் பாவமாகும். கடவுளின் அருமைப் பிள்ளைகளாகிய எளிய உயிர்ப் பிராணிகளைக் கோவில் வாயிலில் அறுத்து இரத்தத்தைச் சொரிவது எவ்வளவு கொடுமையாகும்! பிள்ளையைப் பெற்றோர் முன்னர் வெட்டி வீழ்த்தினால் தன்னர் பொறுப்பரோ? கொலை புரிவோரைக் கடவுள் சும்மா விடுவாரா? உயிர்ப்பலி யிடுவதால் தெய்வங்கள் திருப்திப்படும் என்று எண்ணுவது பேதைமையேயாகும். நம்மைப்போல் தெய்வங்கட்குச் சரீரம், பசி, தாகம், நோய் ஆகியவை இல்லை. நமது அன்பை வெளிப்படுத்திக் காட்டுதற்கும், மரியாதையின்பொருட்டுமே நாம் தேங்காய் பழம் அன்னம் ஆகியவற்றை நைவேதனஞ் செய்கின்றோம். இத்தகைய சுத்த ஆராதனையே மிக உயர்ந்ததாகும். கள்ளும் ஊனும் வைத்துப் படைப்பது மிக மிகக்கீழான அசுத்த ஆராதனையே யாகும். நல்லறிவுடையோராகிய நாம் உயிர்ப்பலியிடும் தீய வழிபாட்டை அறவே விடுத்து, பாற்பொங்கல், மாவிளக்கு, தேங்காய், பழம், இளநீர், பானகம் ஆகியவைகளைக் கொண்டு செய்யும் நல்வழிபாட்டையே மேற்கொண்டு இன்ப வாழ்வு வாழ்தல் வேண்டும். உயிர்ப்பலியிடும் கொடிய அநாகரீக வழக்கத்தை விடுதற்கு ஒருவரும் அஞ்சவேண்டாம். உயிர்ப்பலியிடுதற்கே அஞ்சுதல் வேண்டும். உயிர்களிடத்து இரக்கங்கொள்வோரையே கடவுள் பெரிதும் நல்வாழ்வடையும்படி செய்வார். உயிர்ப்பலி யிடாவிட்டால் சுவாமி குறை வரும் என்பது தவறேயாகும். பலியிடப்பெற்ற பிராணியின் உடல் சுவாமிக்குப் பயன்படுவதில்லை. எல்லாம் நமது வயிற்றுப் பெருமாளுக்கே அர்ப்பணமாகின்றது. உயிருடன் ஆடுகோழிகளைக் கோயிலில் அடைத்து வைத்தால், சுவாமி ஒரு நாளும் அவைகளை அடித்துத் தின்னாது. அதலால், அன்பர்களே! உயிர்ப்பலியை நிறுத்துங்கள். ஏழைப்பிராணிகளைக் காப்பாற்றுங்கள். சுத்த ஆராதனை செய்து சுகம் பெறுங்கள்.

## நீர் கொழும்பில் மாரியம்மன் கொண்டாட்டம்.

சிலோனில் நீர்கொழும்பு என்னும் ஊரில் இந்திய செட்டியார்களால் ஸ்ரீ மாரியம்மன் இரத உற்சவம் வருசா வருசம் தைமீ வெகு சிறப்பாய் நடந்துவருவது வழக்கம். ஆனால் அவர்களிஷ்டப்படி மெயின் ஸ்ட்ரீட்ப்பளக் ரோடு வழியாய் ஸ்ரீ தேவியின் இரதத்தைச் செல்லவிடாமல் அவ்வூர் சிங்கள ஜாதியார் திரளான கூட்டத்துடன் மாதா கோவில் முன் வந்து தப்பாக்கு,தல், பாட்டில்முதலியவைகளைக் காட்டி பயமுறுத்தி தடுத்துவருவார்கள். ஆனால் இவ்வருடம் 17-1-27-ல் நீர்கொழும்பிலிருந்து சுமார் $2\frac{1}{2}$ மைல் தூரத்திலுள்ள தவட்டாவத்தை என்னும் ஊர் போய் 19—1—27-ல் சுமார் $1\frac{1}{2}$-மணிக்கு தவட்டாவத்தையிலிருந்து அம்மனின், இரதம் வெகு சிறப்பாய் அலங்கரிக்கப்பட்டு நீர்கொழும்புக்கு தக்கபோலீஸ் பந்தோபஸ்துடன் மிக்ககவனத்துடன் வந்தது. சுமார் 4-மணிக்கு மாதா கோவில் முன்வரவும் ரோடு பூராவும் சிங்களப் பெண்களால் வழிமறிக்கப்பட்டு தங்கள் லைகளில் ஜெபமாலை வைத்துக்கொண்டு மந்திரம் செபிக்கலானார்கள். அவர்களுக்குப் பின்னால் ரோடுகெடுக சிங்களவாகூட்டமாகவேயிருந்தது. இரதம் கோவிலைக்கடந்து செல்லமுடியாமல் நிற்கவே போலீசார் ஜனங்களை கூடுமானவரை விலக்கியும் தங்களால் முடியாது போய்விட்டது. சில போலீஸார்களுக்கும் மேலதிகாரிகளுக்கும் கல்லெறிகளுநேமன்டு. உடனே கொழும்புக்கு தந்தி கொடுக்க $6\frac{1}{2}$ மணிக்கு கொழும்பிலிருந்து சுமார் 75 இங்கிலீஷ் பட்டாளங்கள் வந்தன. பட்டாளங்கள் வரவும் வழிமறித்த பெண்களும் ஆண்களும் மாதா கோவில் காம்பவுண்டுக்குள் ஓட ஆரம்பித்தார்கள். பின்னால் இரதம் கோட்டைக்கு செலுத்தப்பட்டது. பப்ளிக் ரோடில் இந்தியர்கள் செல்ல உரிமையில்லையென்று வாதிட்ட மாதர்களின் மனதை கண்டதற்கே அஞ்சிற்றுபோனும்! இது விஷயமாய் ஸ்ரீமான் நடேசய்யரவர்கள் மிகவும் பிரயாசையெடுத்துக் கொண்டார்கள்.

க. பொ. சோமசுந்தரநாடார்.

## ஏழாயிரம்பண்ணை.

21—1—27ல் சாத்தூரிலிருந்துவரும் மார்க்கத்தில் பழய ஏழாயிரம்பண்ணை இந்தநேசியவல்மெண்ட்டரி பாடசாலை முன்னால் ஆண்பெண் இரு பாலரும் குழுமியிருந்தார்கள். கூட்டங்கண்டு விசேஷமென்னவென்று அவண் சென்றேன். அங்கு பள்ளிக்கூடப் பாலர்களுக்கு ஒரு சகோதரர் பண்டை நாள் முறைப்படி நன்றாய் மனதிற் பதியும்படி அவரவர்கள் கற்பவரும் பாடப் புஸ்தகங்களிலுள்ளதைத் தெளிவாயெடுத்துச் சொல்லியும், பள்ளிக்கூட போதகாசிரியர்கள் பாலர்களுக்கு ஒவ்வொரு பாடத்தையும் தெளிவாய் உவமானத்துடன் பார்ப்பனர்கள் தங்கள் சிறு குழந்தைகளுக்கு பார்ப்பனரல்லாதாரைப் பற்றி தாழ்வாக உவமான உபமேயங்களுடன் எடுத்துச் சொல்லி சிறு பிராயமுதலே எப்படி கற்றுக்கொடுக்கிறார்களோ அதைப்போல நமது சிறுவர்களுக்கும் நன்றாய் மனதில் பண்டைக்கால முறைப்படி தமிழ் படிப்பானது பதியும்படி திருஷ்டாந்த தாஷ்டாந்தத்துடன் சற்றுக் கொடுக்க வேண்டுமென்றும் கூறினார். அது சமயம் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதாரைப்பற்றி என்ன சொல்லிக்கொடுக்கிறார்கள்; அதை யாவருமறியத் தெரியும்படி கூறவேண்டுமென ஒருவர் கேட்டுக் கொண்டார். அதற்கு அமைமுதறிஞர் பின்வருமாறு கூறினார். "பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதாரை இழிகுலத்தவரென்றும் சூத்திரரென்றும அவர்களைத் தொட்டால் தீட்டு வந்துவிடுமென்றும் சிறு பிராய முதலே கற்பித்தவர்தபடியாற்றான் வயதுவந்தவுடன் ஜாதியபிமானமும் மற்றோரைக் கண்டால ஒதுங்கிடச்சொல்வதும் தொட்டால் தீட்டுவந்து அவர்களை பிடித்துக் கொள்ளுமென்றும கூறுகிறார்கள். நம்மை ஏமாற்றி மாதரு கெர்ப்போற்பத்தி முதல்மரண பரியந்தமும் அதன் பின்னும் சாஸ்திரம் கூறிப் பணம் பறித்து ஜீவிக்கும் பார்ப்பனர்கள் கொடுமை நீக்க இப்போது அநேகம் பெரியார்களும் பத்திரிகாசிரியர்களும் முன் வந்து மதுரையில் பார்ப்பனரல்லாதார் மகாநாடு ஒன்று கூட்டி அநேக தீர்மானங்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள். ஆனபடியால் சகோதர சகோதரிகள் இவ்விஷயத்தை மனதில்வைத்து நமது சிறுவர்களுக்கு நன்றாய்ப்பதியும்படி போதிக்கவேண்டு"மென்று கூறினார். அவண் நடந்த பிரசங்கத்தை பூராவுமெழுதினால் விரியுமென்றஞ்சி முடித்தாம். மேற்கண்ட விதம் எடுத்துச்சொன்னவர் ஏழாயிரம் பண்ணை ஸ்ரீமான் சுப்பைய நாடார் என்றும், அவர் அவ்வூர் பெரியார்கள் பள்ளிப்பாலருக்கு போதிக்குமாறு அழைக்கப்பெற்றிருக்கிறார்களென்றும், அவர் யாதொரு பிரதிப்பிரயோஜனமின்றி போதிக்க கூடியவரென்றும், எந்த ஊர்களுக்கு அழைத்தாலும் தவறாமல் மாசம் இருமுறையாவது வந்து போதிக்க ஆவல்கொண்டிருப்பதாகவும் அறியலானேன். இவ்வளவு தயாளகுணத்தோடு பொதுக் கைங்கரியத்தில் ஈடுபட்டுழைக்கும் நமது சகோதரருக்கு நீண்ட ஆயுளும் செல்வமும் கொடுத்து மென்மேலும் பொது ஜன சேவையிலீடுபடுத்த எல்லாம் வல்ல இறைவனைப்பிரார்த்திப்போமாக.

என். ஆர். ஏ. பெருமாள்சாமி

சிப்பிப்பாறை.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



# திருச்சுழிகையில் ஸ்கூல் கட்டடத் திறப்பு விழா.

(ஒரு நிருபரிடமிருந்து)

அருப்புக்கோட்டைக் கருகாண்மையில் அமைந்துள்ள திருச்சுழிகையின் கண்வாழ் நாடார்மகாஜனங்களின் பெரும் முயற்சியால் புதிதாக சேர்த்தியான பள்ளிக்கூடக்கட்டடமொன்று 15000 ரூபாய் செலவு செய்து கட்டி முடித்து பட்டிவீரன்பட்டி ஸ்ரீமான் ஊ. பு. அ. சௌந்தரபாண்டியநாடார் எம். எல். ஸி. அவர்கள் மேற்படி கட்டடத்தைத் திறந்து வைக்க அழைக்கப்பெற்றிருந்தார்கள்.

திறப்பு வைபவதினமாகிய 4-2-27-ல் ஊர்ரெங்கணும் பந்தலிட்டு மகா தோரணங்கள் கட்டி அலங்காரஞ் செய்யப்பெற்றிருந்தது. அன்று காலை தலைவரவர்கள் அருப்புக்கோட்டையிலுள்ள முக்கிய பிரமுகர்களுடனும் மதுரை நாடார் சங்கம் காரியதரிசி ஸ்ரீமான் ஆறுமுகநாடார் அவர்களுடனும் 10½ மணிக்கு ஊருக்குள் வந்திறங்கியவுடன் மேளவாத்தியம்; சாரணர்கள், யானை முதலான வைகளுடன் வந்தவர்களை எதிர்கொண்டழைத்து நீண்ட கரகோஷத்தினிடையே தலைவர்களுக்கு பூமாலைசூட்டி ஊர்வலமாக ஸ்கூல் கட்டடத்திற்கு அழைத்து வரப்பட்டனர். ஹெட்மாஸ்டர் மகா-ள-ள-ஸ்ரீ வ. கே. சுப்பிரமணியஅய்யர் அவர்கள் வரவேற்பு சொல்லியவுடன் சரியாக 2½ மணிக்கெல்லாம் ஸ்ரீமான் கள் சினியப்பநாடார், பழனிச்சாமி நாடார் ஆகியவர்களின் வேண்டுதலின் பேரில் ஸ்ரீமான் சௌந்தரபாண்டிய நாடாரவர்கள் பலத்தகரகோஷ மேளவாத்தியத்தினிடையே திறந்து வைத்தார்கள். திருச்சுழிகையைச் சுற்றியுள்ள கிராமங்களிலிருந்தும் விருதுநகர், அருப்புக்கோட்டையிலிருந்தும் ஏராளமான நாடார் மக்கள் ஊர் உறவின் முறை சார்பாகவும் தனித்தும் விஜயஞ்செய்து சிறப்பித்தனர்.

பின் ஸ்ரீமான் சௌந்தரபாண்டிய நாடார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் ஸ்கூல் கட்டடத்தில் உடன் திறப்பு வைபவக் கூட்டமொன்று கூடியது. அது சமயம் உள்ளூர் இதர குலப்பிரமுகர்கள் அனைவரும், உத்தியோகஸ்தர்கள் எல்லோரும் தவறாது விஜயஞ் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது. கடவுள்வணக்கமும், அக்கிராசனர் வரவேற்புப் பாட்டுகளும் அருப்புக்கோட்டைசங்கரலிங்கவிலாஸ் பஜனையமாணவர்களால் பாடப்பெற்றது. திருச்சுழிகை மகா-ள-ள-ஸ்ரீ உறவின்முறை நாடார்கள் உத்தரவுக்கு ஊகூல மானேஜிங் கமிட்டி மெம்பர்களின் சார்பாக ஸ்கூல் மானேஜர் ஸ்ரீமான் க. முத்துநாடார் அவர்கள் அக்கிராசனருக்கு உபசாரப்பத்திரமொன்று வாசித்துக் கொடுத்தார்கள். சனம் அக்கிராசனரவர்கள் முன்னுரையாக, தம்மை இவ்வளவு கண்ணியப்படுத்தியவைகளெல்லாம் தமக்கன்றென்றும், அவையாவும் நம் நாடார் மகாஜன சங்கம் தமக்களித்த பெருமை கொண்டமையினாலேயே யாதலால் அவை நமது சங்கத்திற்குச் செய்த பெருமையேயாகுமெனக் கொள்வதாகவும் சொல்லி உபசாரப் பத்திரத்திற்கு பதிலிறுத்தார்கள்.

அதன்பின் கல்வி என்னும் விஷயம் பற்றி ஸ்ரீமான் தி. கருப்பையாபிள்ளையவர்களும், சமூக முன்னேற்றம் என்பது பற்றி ஸ்ரீமான் சு. ஆ. முத்து நாடார் அவர்களும், ஸ்ரீமான அ. பெ. இரத்தினவேல் நாடாரவர்கள் நமது கடமை என்பது பற்றியும் வெகு உருக்கமாகப் பேசினார்கள். அக்கிராசனர் முடிவுரையில் நாடார் சமூகம் இதர சமூகங்களோடு சுமுகமாய்ப்பழகி சகலத்திரளுடனும் விகற்பமின்றி ஒத்துழைத்துவரவேண்டு மென்று அச் சுறுத்தினார்கள்.

இவ்விழாவின் சகல நடபடிகளிலும் மானேஜிங் கமிட்டியாருடன் கலந்துழைத்த அருப்புக்கோட்டை ஸ்ரீமான் ச. சு. பழனிச்சாமிநாடார் அவர்கள் வந்தனோபசாரம் சொல்லி தலைவர்களுக்கு பூமாலை சூட்டினார்கள். அவ்வமயம் ஸ்கூலின் அபிவிருத்தி கருதி நன் கொடையும் சாமான்களும்கொடுத்துதவியது பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டு அவ்வுதவி புரிந்தோர்களுக்கு வந்தனஞ் சொல்லப்பட்டு சபை இனிது கலைந்தது. வந்திருந்த வெளியூர் உள்ளூர் ஜனங்கள் அனைவர்க்கும் அறுசுவையுடன் அமுதளிக்கப் பெற்றது. இவ்வைபவம் யாவரும் திருப்தி கொள்ளத்தக்க மாதிரியிலும் வியப்புறத்தக்கரீதியிலும் வெகு கண்ணியமாயும் சிறப்பாயும் நடந்தேறியதுபற்றி பெரிதும் உவகை கொள்கின்றோம்.

---

# நாடார்களும், நாடார் மகாஜன சங்கமும்.

உண்மையான விஷயங்களைக் கேட்கப்பட சில சமயம் நமக்கு விசனமும் வெட்கமும் ஏற்படலாம். சுகமில்லாதவன் சுகமுள்ளவனைப்போல் நடித்து வருவது அவனுக்கும் மற்றவர்களுக்கும் பிரயோஜனமாயிராது. அது போல் நாடார்களாகிய நாம் ஜன சமூகத்தில் நம்முடைய ஸ்தானம் இன்னதென்று திட்டமாய்த் தெரிந்துகொள்ளாத வரை நம்மை நாம் விர்த்திசெய்து கொள்ளக்கூடாத நிலைமையிலேயே இருக்கவேண்டியதாகும். நம்மவர்களில் உயர்வான ஸ்தானத்தை அடைந்தவர்கள் சில சமயங்களில் நமது ஜாதிக்கே பிறரால் பெரும் அவமதிப்பைத் தருவதான மரம் ஏறும் தொழிலை அல்லது கள் இறக்கும்தொழிலை ஒழித்துவிட வேண்டுமென்றும் அவ்விதத் தொழிலைச் செய்து வருபவர்களை நம்முடைய ஜாதியினின்றும் நீக்கிவிடவேண்டுமென்றும் சில சமயம் அதிக வெறுப்போடும் கவலையோடும் சொல்லிக்கொள்வதுண்டு. இவ்விதம் சொல்பவர்களிடம் நமக்கு விசேஷ மதிப்பும் பெருமையுமுண்டு. ஏனென்றால் இவர்கள் தமது சொந்த ஜனங்களிடத்துள்ள அன்பும் அபிமானமும் மிஞ்சியே இவ்விதம் கூறுபவராவர். ஆயினும் நாம் இதை எக்காலத்தில் அமுலுக்குக்கொண்டு வருவது பல வகையிலும் சாத்தியப்படாததான். என்றாலும் இத்தகைய தொழில் செய்வோரை முற்றும் பிரித்துவிட வேண்டுமென்ற எண்ணம் நமக்கில்லாததுபோலவே கள் இறக்கும் தொழில் க்ஷத்திரிய சின்னமென்றும் அமார் தொழிலென்றும் புராணங்கள் எழுதியதொழிலை விர்த்தி செய்து கொண்டிருக்க வேண்டுமென்ற கொள்கையும் எமக்கில்லை. ஏனென்றால் உலகில் எப்பக்கத்திலும் மரம் ஏறுபவர்கள் ஜன சமூகத்திலிருந்து விலக்கப்பட்டே யிருக்கிறார்கள். இதர ஜில்லாக்களில் இத்தத் தொழிலைச் செய்கிறவர்கள் நம்முடைய ஜாதியைச் சேர்ந்தவர்களில்லைதான். ஆகையால்தான் திருநெல்வேலி மதுரை ஜில்லாக்களிலும் உள்ள நாடார்களில் சிலர் ஷெ தொழிலில் ஈடுபட்டிருப்பதின் பொருட்டு நாடார்கள் பூராவுமே ஓர் ஜாதியாராய் இதர ஜில்லாக்களிலுள்ள கள் இறக்கும் ஜன சமூகத்துக் கொப்பான ஸ்தானத்தில் வைக்கப்பட்டும் மதிக்கப்பட்டும் வருகிறார்கள். வட ஜில்லாக்களில் நாடார்களுக்கு ஹிந்து ஆலயங்களில் பிரவேசிக்க இதர ஜாதியாருடன் சம உரிமைஉண்டு. ஆயினும் அவ்விடங்களில் கள் இறக்கும் தொழிலை உடையவர்களுக்கு ஆலயப் பிரவேசம் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை யென்றே நினைக்கிறேன். இது உண்மையானால் நம்முடையவர்கள் திருநெல்வேலியில் ஷெ தொழிலிலிருந்து முற்றும் விடுதலையடையாதவரை நமது சமூகம் தன்னைப் பரிசுத்தப் படுத்திக்கொண்டதாக நாம் நினைக்கமுடியாது. நாம் இவ்விதம் சொல்லுவதை யிட்டு ஷெ தொழிலை தமக்கு ஜீவாதாரமாகக் கொண்டவர்கள் எம்மீது வருத்தமடையாமலிருக்க மிகவும் அன்பாய் வேண்டுவேன். நமது நாடார்மகாஜன சங்க பிரசிடெண்டாயமர்ந்த அக்கிராசனரொருவர் தமது உபந்யாசத்திடையே நீங்கள் இறக்கிக்கொடுக்கிற பதனீரை வாங்கிச் சாப்பிடுகிறவர்களும் கூட உங்களைக் குறைவாய் மதிக்கிறார்கள்; ஏனென்றால் அந்தத்தொழில் உங்களையும் உங்கள் வீட்டையும் உங்கள் பெண்களையும் பிள்ளைகளையும் அசுத்தப்படுத்தி ஜன சமூகத்தில நீங்கள் நெருங்கிப் பழக முடியாத ஓர் நிலைமையில் வைத்துவிடுகிறது; தவிரவும் மதுவருந்துகிறவனைப்போலவே மதுவை உண்டுபண்ணுகிறவனும் சண்டாளனாகிறான் என்று வேதங்கள் கூறுகின்றன; ஆகையால் கள் இறக்கும் தொழிலை நீங்கள் நிறுத்தவேண்டும் என்று யோசனை கூறினது நம்மவர்களுக்கும் ஞாபகமிருக்கும். ஆனாலும் அவர் அக்கிப ஜாதியாராயிருந்ததால் பனையேறும் தொழிலை கட்டாயம் விட்டு விடுங்கள் என்று சொல்லத் தைரியப்படாமல் சர்க்கரை உண்டாக்கும் தொழிலை விர்த்தி செய்யுங்கள் என்று உபசாரமாய்ச் சொல்லிவைத்தார். என்றாலும் நாம் ஒருபடி அதற்கதிகம் செல்வதானால் குற்றமாகாது. நம்முடைய சொந்த ஜனங்களே தம்மில் பனையேறுபவர்களைக் குறைவாய் மதிக்கவும் பேசவும் ஏவப்படுவார்களானால் இதர ஜனங்கள் நம்மைப் பெருமையாய் மதிக்கவேண்டுமென்று நாம் எவ்விதம் எதிர்பார்க்கலாம்? நாடார்களுக்குச் சொந்தமான கிராமங்கள் பல பனைமரங்களால் நிறைந்த கிராமங்கள்தான். இந்தக்கிராமங்களில் நாடார்களுக்கு பனை மாருலை மிருதியானவை. அப்படி யிருந்தும் இந்த நாடார்கள் தங்கள் பனையை ஏறிப் பதனீர் இறக்கித்தரும் தம் குலத்தவரை எவ்வளவோ குறைவாயும் நீழ்ப்பாயுமே மதிக்கிறார்கள். இவ்விதம் நாம் சகிக்கமுடியாத ஓர் நிலைமையையற்றவர்கள் பெருமையான ஓர் நிலைமையாகக் கொண்டாட வேண்டுமென்று நாம் நினைக்க முடியுமா? இதையறிந்து பலர் இத்தொழிலை நிறுத்திக்கொண்டே போகின்றனர். வருஷந்தோறும் பனையேறிகள் குறைந்துகொண்டே போகிறார்கள். பனையேறிகள் குறைந்து கொண்டு போகப்போக நமது சமூகம் விர்த்தியடைந்து கொண்டேதான் போகிறது. இத்தொழிலை விட்டு விட்ட கிராமத்தவர்கள் இதொழிலை செய்துகொண்டிருந்தகாலத்தை விட மேலான ஓர் நிலைமைக்கே வந்திருக்கின்றனர். இத்தொழிலை விட்டுவிட்டதின் பயனாய் வெறும் குறைவடைந்து விடவில்லை யென்பதே அனுபவ உண்மை. ஆகவே நம்மவர்கள் இத்தொழிலை விட்டுவிடவேண்டுமென்று நாம் நமது பிரசாரங்களைக் கொண்டு போதிப்பதினால் சிறிது சங்கடமும் சல்லியமும் ஏற்படக்கூடுமானாலுங்கூட நாம் இவ்வித அபிப்பிராயத்தை வெளியிடாமல் அந்தரங்கமாயும் ரகசியமாயும் வைத்துக் கொண்டிருக்க வேண்டிய காலம் முடிந்து போயவிட்டதென்றே நாம் நினைக்கவேண்டும். நம்மவர்கள் இத்தொழிலை நிறுத்திவிட்டால் இதனால் லாபமடையக்கூடிய நம்மவர்களுக்கே பெரும் நஷ்டமென்றும், பல கிராமங்களில் பனைகளைப் பெருஞ் சொத்தாக உடைய நாடார்கள் நஷ்டமடைய வேண்டியதாகு மென்றும், பனையேற வேறு என்னவகை யென்றும், பல கேள்விகள் ஏற்படக்கூடும். என்றாலும் பனையைச் சிருஷ்டித்த ஈஸ்வரன்—பனையினால் மனித சமூகத்துக்கு நன்மையளிக்க விரும்பிய சிருஷ்டி கர்த்தன் இப்பனைகளைப் பண்டுத்தவும் அதனால் நாம் லாபமடையவும் ஓர் வழியைக் கண்டுபிடிக்கக்கூடாத வீண் குயவனல்ல வென்றெண்ணி நம்மை நாமே பரிசுத்தம் செய்யக் கூடிய எம்முயற்சியையும் தளராது செய்துவருவோமாக.

D. B. S.

[தொடரும்.]

---

# கடிதங்கள்.

## S S. விஸ்வநாததாஸ் சிகிச்சையிலிருக்கிறார்.

சிறந்த தேசபக்த சிகாமணியாகிய நாடக திலகம் எஸ். எஸ். விஸ்வநாததாஸ் அவர்கள் 5—1—27 ல் திண்டுக்கல்லுக்கு ரயிலில் பிரயாணம் செய்யுங்கால் காலில் அடிபட்டு எலும்பு ஒடிந்து மதுரை ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டு தற்போது எலும்பு கூடி சௌக்கியமடைந்துவருகிறார். கூடிய சீக்கிரத்தில் பூரண சுகமும் பெற்று நாட்டுக்கும் நாட்டவர்க்கும் சிறந்த தொண்டு புரிய ஆண்டவனை வேண்டுவோமாக. சிற்சில பத்திரிகைகள் வாயிலாகவும் பலர் வாய்மொழியாலும் அவரைப் பற்றிய சரியான தகவல் தெரியாமல் பலவாறு சொல்லப்படுவதனைத்தும் உண்மையல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

டி. வி. முத்துக்கிருஷ்ணன்
கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரி அட்டண்டர், மதுரை.

## நாடார்களும், இந்துமத தேவஸ்தானங்களும்.

அண்மையில் நமது இராஜப்பிரதிநிதியவர்களிடம் அங்கீகாரம் பெற்ற இந்துமத தேவஸ்தான மசோதாவால், தனிப்பட்டு கோயில்களையும் அதற்கான சொத்துக்களையும் ஏற்படுத்தியிருக்கும் நாடார் ஜாதியினர்க்கு ஏற்பட்டிருக்கும் பாதிப்பை நாடார்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் அறிவுகொண்டு ஆலோசனை செய்ய வேண்டுமென்றும், மசோதா சட்டத்தை வாங்கிப்படித்துணர வேண்டுமென்றும், மசோதா அனுஷ்டானத்திற்கு வந்துவிட்டால் நமது இஷ்டப்பிரகாரம் கோயில் சம்பந்தமாய் ஏதும் செய்ய இயலாதென்றும், அவைகளின் வருமானங்கொண்டு அவ்வருமானத்திற்குரியவர்களான நமது நலன் குறித்து செலவிடப்படமாட்டாதென்றும், ஆகையால் இத்தகைய மசோதாவினால் நமக்கு பிரயோஜனம் யாதுமின்மையால் இதை யொழிக்குமாறு வேண்டிய பிரயத்தனங்கள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் விருதுநகரிலிருந்து மகா-ள-ள-ஸ்ரீ பிரகாசம் என்பவர் எழுதுகிறார்.

## நாடார் மகாநாட்டிற்கு மகாத்மா காந்தி அடிகளின் அக்கிராசனம்.

நாடார் மகாஜன 11-வது மகாநாட்டைத் திருநெல்வேலியிற் கூட்டி வைப்பதாய்ஒப்புக்கொண்ட தலைவர்கள் கடந்த வாண்டில் அதுவகையில் கவலையெடுத்திலரெனவும் இவ்வாண்டிலேனும் அதே ஸ்தலத்தில், வரும் ஏப்ரல் மாதத்தில் தென்னாடு நோக்கிவரும் அண்ணலாம் மகாத்மாகாந்தி யடிகளாரின் தலைமையின் கீழ் மகாநாட்டைக் கூட்ட சங்க உத்தியோகஸ்தர்களும் ஒப்புக்கொண்ட தலைவர்களும் முயற்சியெடுத்துக்கொள்ள வேண்டுமாறு கேட்டுக் கொள்வதாகவும் மிஸ்ட்டர் இரத்தினம் என்பவர் நமக்கு எழுதுகிறார்.

## கிரஹப்பிரதிஷ்டை.

கும்பகோணம் ஸ்ரீ ஆதிகும்பேஸ்வர ஸ்வாமிகோவில் மேலரத வீதியில் பாண்டியகுல நாடார்களில் நாட்டாண்மை மகா-ள-ள-ஸ்ரீ பெ. கா. பெரியண்ணநாடார் அவர்களுக்குட்பட்ட உறவின் முறையார்களால் கட்டப்பெற்ற பஜனாலயத்திற்கு 6-2-27-ல் கிரஹப்பிரவேசம் வெகு விமரிஸையாய் நிறைவேற்றி வைக்கப்பெற்றது என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# விருதுநகர்.

## சைவ சன்மார்க்க சங்கம்.

நாளது மீ 22உ யன்று (4-2-27) ஜீவகாருண்ய நோக்கமாகக் கொண்டு பிரசாரஞ் செய்வதின்பொருட்டு சைவ சன்மார்க்க சங்கம் என்னும் நாமதேயத்துடன் நிறுவப்பட்டிருக்கிறது. மெம்பர்கள் 60 வரையுஞ் சேர்ந்திருக்கிறார்கள். அதற்கு மகா-ா-ஸ்ரீகளான ல. பெ. பழனியப்ப நாடார் அவர்கள்-போஷகராகவும், கு. ப. குருசாமி நாடார் அவர்கள்- பிரஸிடெண்டாகவும், எ. ச. அ. பழனியப்ப நாடார் அவர்கள் காரியதரிசியாகவும், கூ. சி. மு. சி. நாகரத்தின நாடார் அவர்கள்—பொக்கிஷதாரராகவும், அ. திருவாலய நாடார் அவர்கள்-பிரசாரகராகவும் உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர். மேல்கொண்டும் கனவான்கள் அங்கத்தினர்களாகச் சேர்ந்து சங்கத்தின் நோக்கம் இனிது நிறைவேறும்படி செய்யக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

எ. ச. அ. பழனியப்ப நாடார்,
சைவசன்மார்க்க சங்கக் காரியதரிசி.

---

## பிராமணீயத்தை யொழித்த திருமணமும், கிரஹப்பிரவேசமும்.

(1) இவ்வூர் பிரபல வியாபாரி திருவாளர் ப. சி. சண்முக நாடார் அவர்கள் தமது ஜேஷ்ட சகோதரர் குமாரர் ஸ்ரீமான் பொன்னப்ப நாடார்க்கு பார்ப்பனப் புரோகிதர்களை அழைக்காமல் நாடார் குல குருக்களைக் கொண்டு நாளது மீ 24உ (6-2-27) யன்று சிறப்பாக திருமணம் நடத்தி வைத்தார். இவ்வைபவத்திற்கு பார்ப்பனரல்லாத பிரமுகர்கள் பலரும் விஜயம் செய்திருந்தார்கள். இனியாவது நாடார் குல மக்கள் கண்விழித்து இப்புண்ணிய சீலரின் கொள்கையை பின்பற்றும்படிக்கு வேண்டுகிறோம். மணமக்களுக்கு நீடிய ஆயுளும், குபேர சம்பத்தும் அளிக்க சர்வ வல்லமையுள்ள ஈஸ்வரனைப் பிரார்த்திக்கின்றோம்.

(2) இந்நகர் திருவாளர் அ. வெற்றிவேல் நாடார் அவர்கள் தனது கட்டடத் திறப்பு விழாவை நாடார் குல குருக்களைக்கொண்டு வெகு சிறப்பாக நடத்தினர். அவ்வமயம் இந்நகர் முக்கியஸ்தர்கள் பலர் விஜயம் செய்திருந்தார்கள். இன்னவரின் செய்கையைக் கேட்டு பலரும் ஆசீர்கூறி இதுவே தக்க முறையெனப் பாராட்டிப் பேசினார்கள்.

K. சம்பந்தன்,
பார்ப்பனரல்லாதார் வாலிப சங்கக் காரியதரிசி.

---

## பால்ய நாடார் சங்கம், விருதுநகர்.

இச்சங்கத்தின் பொதுக்கூட்டமொன்று 29—1—27-ல் ராவ்பஹதூர் டி. இரத்தினசாமிநாடார் அவர்கள் ஞாபகச்சின்னவாசகசாலையின் மேல்மாடியில், ஸ்ரீமான் கே. இராமசாமிநாடாரவர்களின் தலைமையின் கீழ் கூடிற்று. அவ்வமயம் என். ஆண்டவர் என்னும் பால்யர் 'ஜீவகாருண்யம்' எனனும் அரிய பெரிய விஷயத்தைப் போற்றக் கூடிய வண்ணத்தில் வல்லமையோடு எடுத்தாண்டார். மற்றும் அநேக நண்பர்கள் அதேவிஷயம் பற்றி அதிக அபிலாஷையோடு அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அவர்கள் பேசுகையில் பத்தி, புத்தி, சத்தி, பொதுஜன சேவை, சமூகசேவை முதலிய ரசங்கள் சொட்டும்படியான வார்த்தைகள் கொண்டு பச்சாத்தாபமாக உயர்ந்த நோக்கத்தோடு சிறப்பாய் உரையாடினார்கள். சங்கத்தின் முதல் நோக்கமான பேசப்பழகுதலென்றதை பால்யர்கள் கடைப்பிடித்து வருகிறார்கள். அதன் பின்பு அவைத்தலைவரவர்களே மூன்று பல அருமை பெருமையான முக்கியகருத்தை பால்யர் மனதில் கல்லின்மேல் எழுத்துப்போலும், பசுமரத்தாணிபோலும் பதியும்படி செய்துவிட்டு தனது முடிவுரையை முடித்தார்கள். கடைசியாக வந்தனோபசாரத்துடன் கூட்டமினிது கலைந்தது என்று சங்கக்காரியதரிசி நண்பர் தெ. சி. கா. ராமசாமி எழுதுகிறார்.

## மீண்டும் யுத்தம் உண்டாகுமா?

(முன் தொடர்ச்சி.)

இங்கிலாந்துடனும் அமெரிக்காவுடனும் ஜெர்மானியர் ஏதேனும் உடன்படிக்கை செய்து கொண்டிருக்கின்றனரா என்பதும் இன்னும் வெளிவரவில்லை.

பிரான்ஸ் தேசத்துடன் ஒரு வியாபார உடன்படிக்கை செய்துகொள்ளும்படியான பிரயத்தனம் செய்யப்பட்டும் முடிவு பெறவில்லை. ஜெர்மானியர் ஆப்கானிஸ்தானுடன் உடன்படிக்கை செய்துகொண்டனர். இன்னும் யாரோடும் உடன்படிக்கை செய்துகொள்ள அவர்கள் தயங்கமாட்டார்கள். சர்வதேச சங்கத்திலும் மெம்பாராகிவிட்டனர். எனவே ஜெர்மானியர் மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் தோழனாக விளங்கவே தீர்மானித்துவிட்டனர். ஏனென்றால் உடன்படிக்கைகளெல்லாம் அவசரமான காலத்தில் துண்டுக்கடுதாசிகள் தானென்று நினைத்ததும் பேசினதும் 1914-ம் வருஷத்துக்கு முந்தின ஓர் சம்பவமாக மாத்திரம் அவர்கள் எண்ணவில்லை. உடன்படிக்கைகளின் கதி யுத்தகாலத்தில் அதுவே யாகுமென்று ரூபிக்க ஜெர்மானியர்களுக்கு பல ஆதாரங்கள் ஏற்கனவே தெரிந்திருக்கும். எனவே அவர்களுக்கு இனிஉலகில் உண்டாகும் எந்த யுத்தத்திலும் மாப்பிள்ளைப் பிரியமே உண்டாகும். யுத்தகாலத்தில் ஜெர்மானியின் கூட்டுறவை யார்தான் விரும்பாதிருப்பர். என்ற போதிலும் ஜெர்மானியர்கள் தாமாகவலுவில் யாதாமொரு யுத்தத்திலும் மாட்டிக் கொள்ளவே மாட்டார்கள். தேசங்களுக்கிடையே யுத்தமுண்டானால் சிறிது காலம் நடுநிலை வகித்து தங்கள் வியாபாரத்தால் பெரும் லாபத்தையடைந்து முடிவில் இத்தாலியர் சென்ற யுத்தத்தில் செய்ததுபோல் நிச்சயம் ஜெயம் கிடைக்கும் என்றேற்படக்கூடிய ஓர் கக்ஷியில் சேர்வர். இதைத் தவிர ஜெர்மானியின் புனருத்தாரணத்துக்கு வேறு வகையில்லைதான்.

ஆயினும் தமது பழய நண்பர்களான ஆஸ்திரியா துருக்கி பல்கேரியா முதலிய நாடுகளுக்கு எதிரே நிற்க மிகவும் சங்கோஜமடைவார்கள். ஜெர்மன் ஏகாதிபத்யத்தை உண்டு பண்ணிய பிஸ்மார்க் பிரபுவின் உபதேசத்துக்குமாறுகருஷியாவை விரோதித்துக் கொண்டதே தங்கள் தோல்விக்கு முக்கிய காரணமென்பதை சென்ற யுத்தத்தால் தெரிந்து கொண்டபின் இனி ருஷியாவுக்கு எதிராகவும் நிற்கமாட்டார்கள் தான். ஜப்பானுடன் ஏற்பட்டிருக்கும் மனஸ்தாபத்தை ருஷியர்கள் லகுவில் மத்தியஸ்தம் செய்துவைத்துவிடலாம்; ஜப்பானியரும்ஜெர்மானியருக்குவெகுதூரம் இணங்கியும் போகலாம்; இங்கிலாந்தும அமெரிக்காவும் ஏக அபிப்பிராயமுடையனவென்று பெரும்பாலும் நினைக்கப்பட்டாலும் தற்போது சீன விஷயமாய் அமெரிக்கர் இங்கிலாந்துடன் ஒத்துழைக்க முன்வரவில்லை. இதர தேசங்களும் அமெரிக்காவின் போக்கையே பின்பற்றிவிட்டன. இங்கிலீஷ்காரர் ஒருவரையே சீனர்களும் தங்களுடைய சத்துருவாகப்பாவித்து கடபடி செய்து கொண்டிருக்கின்றனர். இங்கிலீஷ்காரரும் முன் ஜாக்கிரதையின்றி மற்றவர்களை சமபி சீனாவில் தடபுடல செய்ததற்காக வருந்தி அதிகப்பொறுமையுடனும் அவமதிப்புடனும் சீனாவில்துறைமுகங்களை ஒன்றின் பின் ஒன்றாய் காலி செய்து கொண்டு போவதாயும் மிஷனெரிகள் எல்லாரும் தம் சுய தேசத்துக்கு திரும்பி யழைக்கப்பட்டிருப்பதாயும் செய்தி கிடைத்துக் கொண்டிருக்கிறது.

ஆகவே தேசங்களின் நிலைமையை திடமொன்று முன் அறிவிப்பது மிகச் சிக்கலாகவேயிருக்கிறது. இதனிடையில் இங்கிலாந்தின் லேபர்பார்ட்டியார் கான்வுன் கவர்ன்மெண்டை அங்கீகரித்து அவர்களோடு விஷயங்களைப்பற்றி ஆலோசனை செய்யும்படி யோசனை கூறுகிறது. ஆகவே இச்சம்பவம் கீழ் தேசத்தவர்களுக்குப் பொதுவாயும் ருஷியர்களுக்குக் குறிப்பாகவும் ஓர் வெற்றியென்றே பலர் அபிப்பிராயப்படுகின்றனர். இவ்விதமாக சீனாவிலிருந்து ஒரு பெரிய யுத்தம் உண்டாகிவிடலாமென்ற பயம் சற்று குறைந்த போதைக்கும் இவ்விஷயங்கள் சில காலம் சென்ற பின்னாகிலும் ஓர் யுத்தத்திலேயே பூரணமாய் முடிவடைய வேண்டியதாகும். இதற்காகவே சகல தேசங்களும் யுத்தாயுதங்களைத் தயாரித்து யுத்தத்திற்கு ஆயத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவ்விஷயங்கள் இவ்வாறிருக்க, நமது இந்தியாவின் நிலைமை என்ன? நமக்கு கடற்படை வேண்டாமா? காலாட்படை வேண்டாமா? சுயராஜ்ய நிலைமைக்கேனு வாய் இந்திய கவர்ன்மெண்டில் மாறுதலடையாதவரை அவ்விரண்டும் நமக்குப்பயன் தரத்தக்கவையன்று. இந்தியர்கள் சீனாவில் போலீஸ் படைகளாக நிற்கின்றனர். யார் இவர்களை அனுப்பினார்கள்? இது ஒருபத்திரவமே. சுயராஜ்யம் இல்லாதபோதே பகுத்தறிவற்று எவ்வித நிலைமைக்கும் ஆளாக வேண்டித்தானே வரும்—ஆட்டுகிறவன் ஆட்டினால் ஆடவேண்டியதுதானே.

சுயராஜ்யம் அடைய ஒற்றுமை வேண்டும் என்கிறார்கள். இங்கேயோ காங்கிரஸ், ரெஸ்பான்ஸிவிஸ்டுகள், லிபரல்கள், சுயேச்சையார் என்றும் நமது மாகாணத்திலோ பிராமணர் பிராமணரல்லாதாரென்றும் பிரிந்து கிடக்கின்றனர். நாடார்களாகிய நாமோ பிராமணரல்லர் என்பது வெளிப்படை. பிராமணரல்லாதார் என்பது சொற்பொருள் விளக்கம். நம் இனத்தைச் சாரா த பிராமணர்கள் நம்மைத் தள்ளிவிட்டாலும் நம் இனத்தைச் சேர்ந்தவர்களெனப் பொருள் கொள்ளும்படியான நாமதேயம் படைத்துள்ள பிராமணரல்லாதார் என்னும் தேசத் தொண்டர் படையைச் சேர்ந்தவர்களாவது நம்மீது அனுதாபங் கொண்டு நம்மைத் தமது சங்கத்திலிடுக்கிக் கைலாசம்கொண்டு சேர்ப்பரா என்பதைப்பற்றியே மறுமுறை எழுத உத்தேசித்திருக்கிறோம்.

(தொடரும்)

D. B.

---

## தை அமாவாசை உற்சவம்.

ஏரல் தை அமாவாசை பத்து நாள் திருவிழா வெகு சிறப்பாய் நடந்தேறியது. ஒன்பதாம் திருவிழாவை விருதுநகர் ஸ்ரீமான் கொ. சி. சங்கரலிங்க நாடாரவர்கள் வெகு சிறப்புடன் நடத்தினார்கள். பத்தாம் திருவிழா அன்று சுவாமி வெகு ஆரவாரத்துடன் சப்பரத்தின் மீதேறி ஏரல்மாக்கர்வலம் வந்தது. வாண வேடிக்கை முதலானது வெகு விமரிசையாய் நடந்தேறியது. ஜாதி வேற்றுமை யென்பது கிடையாது. நாலாபக்கங்களிலிருந்தும் ஏராளமான ஜனங்கள் வந்திருந்தார்கள். விருதுநகரிலிருந்து வந்த ஸ்ரீமான் பா. அ. மு. ஷண்முகவேல் நாடாரவர்கள் அமாவாசை யன்று 12 மணி முதல் ஐந்து மணி வரையும் வந்த ஜனங்களுக் கெல்லாம் இல்லை யென்னாது போஜனமளித்தார். சுமார் இரண்டாயிரம் ஜனங்கள்வரை யிருக்கலாம் என்று ஸ்ரீமான் கே. எஸ். பச்சயநாடார் எழுதுகிறார்.

---

## பிறையாறு ராவ்பகதூர் த. இரத்தினசாமி நாடார் அவர்கள் ஞாபகச்சின்னம்.

கனம் இரத்தினசாமிநாடார் அவர்கள் தரங்கம்பாடி இருப்புப்பாதைக்காக 1877-ம் வருஷம் முதல் அதிகப் பிரயாசை எடுத்துக்கொண்டவராதலின் இவரின் உருவப்படம் இந்த இருப்புப்பாதை திறப்புவிழா அன்று காலையில் முதன் முதல்மாயவரத்திலிருந்து தரங்கைக்கு வந்தவண்டியில் பாண்டு வாத்தியங்களுடன் எடுத்துவரப்பட்டது. ஒவ்வொருஸ்டேஷனிலும் 'ராவ் பகதூர் ரத்தினசாமிநாடார் அவர்களுக்கு ஜே' என்ற சப்தமாகவே இருந்தது. தரங்கைவாசிகளும் பிறையாறு வாசிகளும் அட்ரஸ்வாசித்து வெகு விமரிசையாய் வரவேற்றார்கள். அக்கன்னாளை எல்லோரும் திருநாளாகக் கொண்டாடினார்கள்.

கனம் நாடார் அவர்கள் கல்வி விஷயத்திலும் ஜாதீய முன்னேற்ற விஷயத்திலும் இன்னும் பொதுக்காரியங்களிலும் எடுத்துக்கொண்ட பிரயாசைக்கு அவருக்கு நன்றி செலுத்தும் பொருட்டு ஒரு ஞாபகச்சின்னம் ஏற்படுத்த முடிவுசெய்து ரூ 2000 வரையில் வசூலிக்கப்பட்டிருக்கிறது.

ஞாபகச்சின்னத்திற்கு அஸ்திவாரக் கல் நாட்டுவிழா (25—11—26) மாலை தஞ்சை அடிஷனல்டிஸ்ரிக்ட்மேஜிஸ்ட்ரேட் மிஸ்டர் தார்ன் துரையவர்கள் தலைமையின் கீழ் வெகு சிறப்பாக நடைபெற்றது.

கோட்டைவாசலுக்கெதிரில் 26 அடி உயரமுள்ள ஒரு சலவைக்கல் தூண்நாட்டி அதன் அடியில் தண்ணீர் குழாய்வைப்பது என்று தீர்மானித்து அதன்படி தூண் மதராஸில் ஒரு கம்பெனியில் ஆர்டர் கொடுத்து வேலை முடிந்து தயாராக விருக்கிறது. கனம் நாடார் அவர்களின் சிரேஷ்ட குமாரர் திரு. தவசிமுத்துநாடார் அவர்கள் பாரிஸ்டர் படிப்புக்காக லண்டன் சென்றிருந்து விடுமுறை நாளைக்கழிக்க இவ்விடம் வந்திருப்பதால் அவர் ஏப்ரல்மாதம் திரும்பி லண்டன் போவதற்குள் மேற்படி ஞாபகச்சின்னத்தை நாட்ட அதி தீவிரமுயற்சி நடந்து வருகிறது.

ச. நமசிவாயம்,

---

## விருதுநகர்—தென்காசி ரயில்வே.

விருதுநகர்—தென்காசி ரயில்வே லயன் வேலைகள் வெம்பவும் துரிதமாகநடந்து கொண்டிருக்கின்றன. வடக்கேயிருந்து சங்கரன்கோவில் வரையும், தெற்கே இருந்து கடையநல்லூர் வரையும் தண்டவாளம் போட்டாகிவிட்டது. பத்துப்பனிரெண்டு மைல் தான் பாக்கி இருக்கிறதாம். அதையும் கூடிய சீக்கிரம் போட்டுவிடுவார்கள். ஸ்டேஷன்கள்கட்டடவேலைகளும் நடந்துகொண்டிருக்கின்றன. மே மீ 31 உ யன்று வண்டி ஓடப்போகிறதாம். சென்னை மெயில், திருவனந்தபுரம் போகக்கூடியது விருதுநகருக்கு 31உ மாலை 5-17க்கு வந்து 5-27-க்கு இந்த லயன்வழி செல்லுமாம்.

மா. உ. சு. குருசாமிநாடார்.

---


## எலிமெண்டரி பர்ட ரத்தினங்கள்.

விவிக்ஸ், நேச்சர் ஸ்டடி ஸயன்ஸ் அடங்கியது. எல்லாப் பாடசாலைகளுக்கும் உபாத்திமாருக்கும் மிகவும் அவஸியம். 3-ம் பதிப்பு விலை அணா 14. இது ஆசிரியரிடமும, சென்னைவேப்பேரி, எஸ். பி. ஸி. கே. டிப்போவிலும் கிடைக்கும்.

ஜேம் வக்கபிளரி.

இங்கிலீஷ் தமிழ் முதல் புஸ்தகம் 6 அணா; 2-ம் புஸ்தகம் 8 அணா. 6 மாதத்தில் இங்கிலீஷ் பேச எழுத லேசாய்க்கற்க எல்லாருக்கும் மெத்த அவஸியம், ஒரு நேர்த்தியான லெட்டர் ரைட்டரும் அடங்கும். இது ஆசிரியர் நாகபட்டணம் மிஷின் ஹைஸ்கூல் ஆசிரியர் எஸ். வி. மீகாயில்பிள்ளையிடமும் ஆரணி மிஷன் பிரஸிலும், ஷை சென்னை எஸ். பி. ஸி. கே. டிப்போவிலும் கிடைக்கும். உபாத்திமாருக்கும் வியாபாரிகளுக்கும் 12 ஜதைக்குமேல் விசேஷித்த கமிஷன்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



# நல்ல தருமம்! நல்ல தருணம்!! நல்ல லாபம்!!!

## அருப்புக்கோட்டை

## "நாடார்குல மித்திரன்" க்ஷேம நிதி

## தர்மப்பண்டு லாட்டரிச் சீட்டு.

## மொத்தம் சீட்டுகள் 33000.

சீட்டு 1-க்கு ரூ 1.



## முதல் பிரைஸ் ரூ 3000.

1927-ஞு மே மீ 4 உ க்கு பிரபவ ஞு சித்திரை மீ 22 உ பிரைஸ் எடுக்கக் கூடும்.

### 1-வது பிரைஸ் ரூ 3000.

| | | | |
|---|---|---|---|
| 2-வது பிரைஸ் | ரூ 1500 | 3-வது பிரைஸ் | ரூ 1000 |
| 4-வது பிரைஸ் | ரூ 500 | | |
| 200 ரூ-ல் 2-க்கு | ரூ 400 | 100 ரூ-ல் 5-க்குரூ | 500 |
| 250 ரூ-ல் 0-க்கு | ரூ 1000 | 20 ரூ-ல் 50-க்குரூ | 1000 |
| 10 ரூ-ல் 100-க்குரூ | 1000 | 5 ரூ-ல் 200-க்குரூ | 1000 |
| 3 ரூ-ல் 600-க்கு | ரூ 1800 | 2 ரூ-ல் 2400-க்குரூ | 4800 |

ஆக பிரைஸ்கள் 3381-க்கு ரூ 17500
புக் 1500-க்குக் கமிஷன் ரூ 3000
குமஸ்தா சம்பளம், அச்சுக்கூலி, விசேஷக் கமிஷன் வகை யறாக்கள் ரூ 1800
தனிப் பிரைஸ் ரூ 1700 பண்டுக்கு ரூ 9000
ஆக ரூ 33000

### குறித்த காலத்தில் பிரைஸ் எடுக்கக் கூடும்.

1-வது பிரைஸ் முதல் 6வதுபிரைஸ்வரைவிழுந்தபுள்ளிகளி டமிருந்து முறையே 150, 75, 50, 25, 10, 10 ரூபாய் அந்தந் தச் சீட்டுவிற்றவர்களுக்குக் கமிஷன் பிடித்துக் கொடுக்கப்பெறும்.

சகல விதமான கடிதப் போக்குவரத்தும் சூ. ஆ. முத்து நாடார், "நாடார் குல மித்திரன்" பத்திராதிபர், அருப்புக்கோட்டை என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும்.

### விசேஷக் கமிஷன்.

நூறு ரூபாய்க்கு மொத்தமாகச் சீட்டு விற்றுக் கொடுப்பவர் களுக்கு ஐந்து ரூபாய் விசேஷக் கமிஷன் கொடுக்கக்கூடும்.

### தனிப் பிரைஸ் விபரம்.

| | | | |
|---|---|---|---|
| 1-வது பிரைஸ் | ரூ 100 | 2-வது பிரைஸ் | ரூ 50 |
| 3-வது பிரைஸ் | ரூ 20 | 4-வது பிரைஸ் | ரூ 15 |
| 5-வது பிரைஸ் | ரூ 10 | | |
| 6-முதல் 10 வரை 5விதப் | ரூ 25 | | |
| 11-முதல் 750-வரை 2 விதம் | ரூ 1480 | | |
| ஆக | ரூ 1700 | | |

தனிப் பிரைஸ், இரண்டு ரூபாய்க்கு மேற்பட்ட தொகைகள் பத்துப் பிரைஸ்களே இருப்பதால் 22 சீட்டுள்ள இரண்டு புஸ் தகம் விற்றவர்கள் தனிப் பிரைஸுக்காக ரூ 2-ம் பிடித்துக் கொண்டு ரூ 38 மட்டும் அனுப்பலாம். தனிப் பிரைஸில் சேர்த்து கொள்ள விருப்பமுடையவர்கள் தனிப் பிரைஸ் ரூ 2 பிடித்துக் கொள்ளாமல் ரூ 40-ம் அனுப்பிவைக்கவேண்டும்.

ஐந்து புஸ்தகம் விற்றவர்கள் விசேஷக் கமிஷன் ரூ 5 ம் பிடித்துக்கொண்டு மீத ரூபாயை அனுப்பி வைக்கலாம். தனிப் பிரைஸுக்குரிய ரூபாயை அனுப்பினுல் தனிப் பிரைஸில் சேர்த் துக் கொள்ளப்படும். அதற்குப் பிரியமில்லையானுல் அதற்குரிய ரூ 5 யும் பிடித்துக் கொண்டனுப்பலாம்.

சூ. ஆ. முத்து நாடார்,
"நாடார் குல மித்திரன்" பத்திராதிபர்.
(சொ. ஆ. சொக்கலிங்கபாண்டியர்,
உப பத்திராதிபர், அருப்புக்கோட்டை.

(2-ம் பக்கத்தின் தொடர்பு.)

கூடும். எண்ணத்தை ஒடுக்கிக்கொள்ள மனதையும் ஒடுக்கிக்கொள்ளவேண் டும். காற்றை அடக்கலாம்; மனதை அடக்கிக்கொள்வது கஷ்டம். இருந் தாலும் ஆண்டவனிருக்கிறுரென்ற உணர்ச்சியால் மனதைக் கட்டுப்படுத் திக்கொள்ளலாம். அது கஷ்டமாகஇருப் பதற்காக அது அசாத்தியமென்று எவரும் நினைத்துவிடவேண்டாம். அது உன்னதமான லக்ஷியம். ஆகவே பலமான முயற்சியினுல் தான் அதை அடையமுடியும்.

ஆனல் நான் இந்தியாவிற்கு வந்த பிறகு தான் மனுஷ்ய யத்தனத்தினுல் அத்தகைய உன்னதமான பிர்மசரி யத்தைக் கைக்கொள்ளுவது கஷ்ட மென்பதை நான் உணர்ந்துகொண் டேன். அதுவரையில் பழ ஆகாரமா னது அவைகளை ஒடுக்கிக்கொள்ளப் போதுமானதென்று நான் நம்பியிருந் தேனென்றும் இனி ஒன்றும் செய்ய வேண்டியதில்லையென்றும் நான் நினை த்திருந்தேனென்றும் இங்கு சொல்லி விடவேண்டியிருக்கிறது.

ஆனுல் என்னுடைய போராட்டத் தில் என்னென்ன நடந்ததென்பதை இப்பொழுது சொல்லவேண்டியதி ல்லை. இருந்தாலும் ஆண்டவனை அடைவதற்காக பிர்மசரியத்தை அனுஷ்டிக்க விரும்புகிறவர்கள் அது அசாத்தியமென்று நினைத்து அதைரி யமடைந்துவிட வேண்டியதில்லை. அவர்களுடைய சொந்த முயற்சியில் அவர்களுக்குள்ள நம்பிக்கை ஆண்டவ னிடத்திலும் அவர்களுக்கு இருந்தால் போதுமானது. எல்லாவற்றிலும் ஆத் மாவிற்கு வெறுப்பு ஏற்பட்டுவிட்டால் சுதாவாகவே ஆசைகள் அகன்றுவிடும். ஆகவே ஆண்டவனுடைய பெயரும், அவனுடைய கருணையும்தான் மோக்ஷ த்தை அடைவதற்கு அவசியம். இந்தி யாவிற்குத் திரும்பி வந்த பிறகுதான் இந்த உண்மை எனக்குப் புலப்பட் டது.

## ரூ100 முதல் ரூ1000

பிரதிமாதம் "அபூர்வ சம்பாத்ய முறைகள்" என்ற புதிய புத்தகத்தைப் படித்து முடித்ததும் சம்பாதிக்கத் தொடங்கலாம். அபூர்வ முறைகளும் விசேஷ சம்பாத்ய ரகஸ்யங்களும் அட ங்கியுள்ளன. விலை அணு பனிரெண்டு. வி. பி. தபால்செலவு பிரத்தியேகம். வெளிநாட்டு நண்பர்கள் ஒரு ரூபாய் முன் பணம் அனுப்பவேண்டும்.

ஆர். சேஷன், எடிட்டர்,
ஸ்ரீரங்கம்,
திருச்சினப்பள்ளி.

உங்கள் வீட்டில் எந்த சமயங்களிலும் செவிக்கு இனிமையான பல சங்கீதப் பாட்டுக் கச்சேரி இனி நடை பெறும்.
100 ரூபாய் பெறும்படியான பெரிய கிராமபோன் (Gramaphone) போலவே பாடக் கூடிய அளவில் செய்யப்பட்ட

## மினியேஜர் கிராமபோன்.

ஜெர்மன் தேசத்தில் ஓர் தொழிற்சாலையில் மாத்திரம் தயாரிக் கப்பட்டது. லண்டன் நகர் வர்த்தகர்களுக்கும், குடும்பஸ்தர்க் கும் ஆயிரக் கணக்காய் செலவிடப்பட் டது. தற்சமயம் எங்களால் ஜெர்மன் தொழிற்சாலையிலிருந்தே தருவிக்கப்பட் டது. பாட்டுகளை சப்திக்கும் இயந்திரங் களுடன் பார்வைக்கு அழகாயும், பற்பல அதிசயங்களுடனும் பாட்டுகள் பாடக் கூடியது. சயிஸ் 6"-6"; பிளேட் 5½;" உயரம் 4" உள்ள கிராமபோன் பெட்டி 1-ம், பல தினுசு பாடும் டபிள் சயிட் ரிகார்டு 1-ம், ஊசிகள் பாக்கட் 1-ம்,



செட் 1-க்கு விலை ரூ 8—8—0. தனி டபிள் சயிட் ரிகார்டு (தட்டு) 1-க்கு ரூ 1. ஊசிகள் பாக்கட் 1-க்கு அணு 4. தபால் சார்ஜ் பிரத்தியேகம். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்ப வேண்டும். பாக்கிங் போஸ்டேஜ் ரூ 1—6—0.

விலாசம்:—
ஒவர்சீஸ் சுவிஸ் வாட்சு கம்பெனி,
மவுண்ட் ரோடு, மதராஸ்.